உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫] வெகுதானியஹு வைகாசிமீ [பகுதி-எ.
Vol. 35. May -June 1938. No. 7.

கம்பராமாயணசாரம்.

[௩௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

சேதுபந்தனப் படலம்.

கடலைக் கடக்க இராமன் அணைகட்டுவித்ததைக் கூறுவது.

அணைகட்டுதல்

விபீடணனும் மற்றையோரும் உடனிருக்கச் சுக்கிரீவன், மேல் நடைபெறவேண்டிய காரியத்தை நன்காலோசித்து, வானரத் தச்சனாகிய நளனை வரச்செய்து, 'சேதுவைக் கட்டுவதே நம்செயல்' என, அவனும் அதுவாயின், 'மலை முதலியவற்றைக் கொண்டுவரச் செய்க' என்றான். இராம லக்குமண விபீடண சுக்கிரீவர் தவிரச் சேனையில் உள்ளார் எல்லாரும் சேதுவைக் கட்ட வந்துசேரும்படி சாம்பன் பறையறைந்து தெரிவிக்கப் பெருந்திரளான வானரர்கள் உப்புக்கடல் ஒன்றை யடைக்க மற்றைக் கடல் ஆறும் வருவன போல, வந்தார்கள். வரும்போது கைகளிலும் தோள்களிலும் தலைகளிலும் மலைகளைத் தாங்கிவந்தார்கள். சிலர் பெயர்த்து வீழ்த்திய மலைகளைச் சிலர் வாலினால் இழுத்தும், சிலர் காலினால் உருட்டியும், சிலர் கரத்தினால் எடுத்தும், சிலர் சிரத்தினால் ஏந்தியும் வந்தார்கள். வானரர்கள் எடுத்துவீசும் மலைகளையெல்லாம் நளன் எளிதாக ஏந்திக் கடலில் ஒழுங்காக அடுக்கினான். மூன்றுகோடி வீரர் ஒன்றுகூடி எடுத்தவரினும் கொணர்ந்து தருக என்று அவர் களை அவன் விரையச்செய்தான். பெருத்த வானரர்கள் பெயர்த்தெறியும் பருத்த மலைகளையும் நளன், சடையப்பவள்ளல் தன்னை அடைந்தவரைத் தாங்குதல்போலத் தாங்கிச் சேதுவைக்கட்டினான்,

*

அணைகட்டுகையில் நிகழ்ந்த அதிசய நிகழ்ச்சிகள்.

வானரசேனைத்தலைவர்கள் மலைகளைப் பிடுங்குவதற்காக அசைக்கும்போது, அவற்றின்மீதிருந்த மேகக்கூட்டங்கள் அலறின. இயக்கர்களும் இயக்கியர்களும் நிலைகுலைந்தோடினர். வானரர்கள் வேரோடு அம்மலைகளைப் பெயர்த்து வீசும்போது அவை ஒன்றின்மீதொன்று தாக்கவுண்டான நெருப்புக்கங்குகள், நீர்மீது தோன்ற, முன் பிரமாத்திரத்தை இராமன் ஏவத்தொடங்குகையில் வாயுலர்ந்து கதறின வருணன், இப்போது 'இது யாருடைய நெருப்போ' என்றஞ்சி ஏங்கினன். ஒரு வானரவீரன் எறிந்த மலையினல் கடல்நீர்த்துளிகள், முத்துக்கூட்டத்தோடும் மேல் எழுந்து போய், இவை நீர்த்துளிகள் இவை முத்துக்கள் இவை நட்சத்திரங்கள் எனத் தெரியாதவாறு நீர்த்திவலைகளும் நித்திலங்களும் விண்மீன்*களோடும் மாறுகொண்டு விளங்கின. வாழ்வுமாறினும் வண்மைமாறாத வள்ளியோர்போல, மா முதலிய மரங்களோடு வானளவு ஓங்கிப் பலருக்கும் பயன்படநின்ற அம்மலைகள் சில கடலிலே வீழ்ந்தபோதும் தம்மிடத்துள்ள தளிர் இலை அரும்பு பூ பிஞ்சு காய்கனிகளோடு தேனும் மீனுக் குணவாக உதவின. ஒருவருக்கும் உதவாது உலோபர் தம் உடைமைகளோடு வீட்டுக்குள்ளே கரந்துறைதல்போலச் சிலமலைகள் எறியப்பட்ட விசையினல் இலை பூ முதலியவற்றோடு சேற்றுக்குள்ளே புதைந்து மறைந்தன. கடலில் வாரியெறியப்பட்டபோதும், சிறிதுமுன்பு தான் விழுங்கியிருந்த யானை வயிற்றின்கண்ணதாகப் பெரிய மலைப்பாம்பு உறங்கினது, கேடுற்றகாலத்தும் அதனையுணராதார்தன்மையை உணர்த்தியது. சிங்கங்களும் புலிகளும் யாளிகளும் கடலில் எறியப்பட்டபோது சுறுமீன்களால் சுலபமாகக் கொல்லப்பட்டது, யாரும் தம்மிடம் நீங்கி வேற்றிடமுற்றபோது தம்மின் மெலியாரால் எளிதிலே வெல்லப்பட்டுவிடும் தன்மையை விளக்கியது.

வானரர்கள் மலைகளைக்கொண்டுவந்து குவித்தலினல் நீர்விலகக் கடல், நிலமானற்போல, விலகிய நீர் நிறைய, நிலம் கடலானது. அனுமனிட்ட மலைகளால் எழுந்த நீர்த்துளிகளோடு மீன்களும் கடலைவிட்டு வானுலகை அடைந்தன. நீலனிட்ட மலைகளால் நிலத்திலே நீர் நெடுந்தூரம் பாய்ந்து பரவ, அங்குள்ளவர்கள் ஓல

* விண்மீன்—நட்சத்திரம்.

மிட்டவண்ணம் ஓடலுற்றனர். சாம்பவானிட்ட விசையினல் தெளித்த நீர்த்திவலை புரோட்சண தீர்த்தம்போலத் தேவர்கள் சிர மீதுசென்று வீழ்ந்தது. குமுதன் சுழற்றியெறிந்த மலை, கடலிலே வீழ்ந்து மத்துப்போலச் சுழலாநிற்க, மேலே தெறித்த நீர்த்திவலை கள் விண்ணுலகத்திலே விழக்கண்ட விண்ணவர்கள், அக்கடல், முன் மந்தரமலை மத்தாக மதனஞ்செய்யப்பெற்றபோது அளித்த அமுதத்தை இப்போதும் அளிக்குமென்னும் ஆசையினல் அவச ராய் ஆனந்தக்கூத்தாடுவர்ராயினர். மேன்மேலும் துன்பம் தொடர்ந்துவந்து வருத்தினும் மனங்கலங்காத உயர்குடிப்பிறந்த பெரியோர்போல, 'ஓங்கி உயர்ந்தமலைகள் தூர்த்து நெருக்கும் போதும் கடல் சிறிதும் கலங்காதிருந்தது.

கடலில் வீழ்த்துவதற்கு வானரர்கள் பழுத்த மரங்களைப் பறித்துச்செல்ல, வேற்றிடமின்றி அவற்றில் வாழ்ந்த பறவைகள் கத்துவன, குடிதாங்கியாயிருந்த குடும்பத்தலைவன் இறக்க, ஆதரவின்றி அழுதரற்றும் அவன் உறவினர்போன்றன. வாழ்வி லும் தாழ்விலும் கணவனைப் பிரிந்திராத குலப்பெண்களைப்போல, மரங்கள் வேருடன் பறிக்கப்பட்டுக் கடலில் வீழ்த்தப்பட்ட போதும், அம்மரங்களைக் கொடிகள் பற்றினபற்றை விட்டிடாது சுற்றியே இருந்தன.

அணைகட்டிமுடித்த வானரர் களிமுழக்கஞ் செய்தல்.

தலைமீது மலைகளைத்தாங்கிவரும் வானரர்கள், நெருக்கமிகுதி யால், செல்லுமின் செல்லுமின் என்று சொல்லுவதன்றிச் செல்லு வதற் கிடமின்றி நின்றபோது, கடலிலேயன்றித் தம் தலைமீதும் ஒரு சேதுவைக் கட்டுவார்போன்றனர். அவர்கள் இவ்வாறு மலைகளைக் கொண்டுவருவாரும், கடலிலே போட்டுவிட்டுக் கொண ரப்போவாருமாகி 'எவ்வளவுதூரம் சேது கட்டப்பட்டது' என் பார்க்குப் பாதிசென்றது, முக்கால் முடிந்தது என்பாருமாயிருந் தார்கள். உலகிலே ஒருபூண்டுமில்லையாம்படி பயிர்பச்சைகளையும் தேடிக்கொணர்ந்து சேதுவிற் சேர்த்து மூன்றுநாளில் அதைக் கட்டிமுடித்தபோது வானரர்களிட்ட ஆர்ப்பு வானத்தைப்பிளந்தது.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ.

ஒரு விளம்பரம்.

கரந்தைத்தமிழ்ச்சங்கம், தஞ்சை.

தமிழ்க்கல்லூரிக்குரிய மாணவர்கள்.

இச்சங்கத்தில் தனித்தமிழ்க்கல்லூரியின் தொடக்கம் அண்மையில் நடந்த வெள்ளிவிழாவில் ஏற்பட்டது தமிழன்பர்கள் அறிவார்கள். இதுபோது சென்னைப் பல்கலைக்கழகத்திற்குரிய வித்துவான் பயிற்சியின் புகுமுகவகுப்பாகிய Entrance வகுப்பு தொடங்கப்பெற்றுளது. இவ் வகுப்பிற்கு இவ்வாண்டில் முப்பது மாணவர்கட்கு உணவு உதவி ஏற்பட்டுளது. மாணவர்கள் S. S. L. C. அல்லது அதற்கொப்பான அங்கில அறிவுடையர்களாக இருத்தல்வேண்டும். தமிழில் சிறந்த பயிற்சியுளதேல் அங்கில அறிவு சற்றுக் குறைந்திருப்பினும் ஏற்றுக்கொள்ளலாகும். மே மீ இறுதிக்குள் விண்ணப்பங்கள் சங்க அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். ஒப்புக்கொள்ளப்பெற்ற மாணவர்கட்கு விவரம் உடன் அறிவிக்கப்படும். அவர்கள் சூன் மீ முதல்வாரத்தில் வந்துசேரல் வேண்டும்.

த. வே. உமாமகேசுவரன்,

தலைவர்.

சீவகசிந்தாமணி உரை நயம்.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை மிகச் சுவைதந்து விளங்குகின்றது. அதனுள் மிகச்சுவைதந்து நய முடையவாய் நிற்பன பல. அவற்றுட் சில படிப்போர்க்கு உப யோகமாக இங்கே எடுத்துக் காட்டப்படும்.

பதிகம்.

சேந்தொத்தலர்ந்தசெழுந்தாமரையன்னவாட்கட்
பூந்தொத்தலர்ந்தபசும்பொற்கொடியன்னபொற்பி
னேந்தொத்தலர்ந்தமுலையின்னமிர்தன்னசாயல்
வேந்தற்கமுதாய்விளையாடுதற்கேதுவாமே.

என்னும் ௩-ஆம் செய்யுளில் மூன்றாமடியிலே 'அமிர்தன்னசாயல்' என்று ஆசிரியர் கூறி, மீளவும் 'வேந்தற் கமுதாய் விளையாடுதற் கேதுவாமே' என்று நான்காமடியிலும், 'அமுதாய்' எனக் கூறிய தற்கு, 'மறுமையிற் சென்றுபெறு மமுதமும் இவள் என்று மயங் கினமைதோன்ற மீட்டும் 'அமுதாய்' என்றார்' என்று கூறிய உரை மிகவுஞ் சுவைதந்து விளங்குகின்றது.

கல்லார்மணிப்பூணவன்காமங்கனிந்துகன்றிச்
சொல்லாறுகேளானனிசூழ்ச்சியிற்றோற்றவாறும்
புல்லார்புகலப்பொறிமஞ்ஞையிற்றேவிபோகிச்
செல்லாறிழுக்கிச்சுடுகாடவள்சேர்ந்தவாறும்.

என்னும் ௪-ஆஞ் செய்யுளில் 'செல்லாறிழுக்கிச் சுடுகாடவள் சேர்ந்தவாறும்' என்னும் அடியில்வரும் 'அவள்' என்பது தேவி யைச் சுட்டாது, 'அங்ஙனம் (நகரத்திலே சச்சந்தனுக்கு) அமுதா யிருந்தவள் இங்ஙனமாயினள். (அஃதாவது சுடுகாட்டை அடைந் தாள்.) என்று தேவரிரங்குதலின் முன்னிற்கவியை நோக்கித் தகுதிபற்றிவந்தது' என்று கூறிய உரை மிகவும் நயம்படநிற்றல் காண்க.

நாளுற்றுநம்பிபிறந்தான்றிசைபத்துநந்தத்
தோளுற்றோர்தெய்வந்துணையாய்த்துயர்தீர்த்தவாறும்
கோளுற்றகோன்போலவன்கொண்டுவளர்த்தவாறும்
வாளுற்றகண்ணாண்மகன்வாழ்கெனநோற்றவாறும்.

என்னும் ரு-ஆஞ் செய்யுளிலே, 'வாளுற்ற கண்ணாள்' என்பதற்கு 'அரசனிறத்தற்கேதுவாகலின் ஈண்டும் 'வாளுற்ற கண்ணாள்' என்றார்' என்றுகூறியதூஉஞ் சிறப்புடைத்து.

சுண்ணம்முடைந்துசுரமஞ்சரிசோர்ந்துதோழி
வண்ணக்கெடுங்கட்குணமாலையைவைதுமாறிப்
புண்மேற்புடையிற்புகைந்தாணுருவியாதுநோக்காள்
கண்ணுக்குடைந்துகடிமாடமடைந்தவாறும்.

என்னும், அ-ஆஞ்செய்யுளில், 'ஆணுருவியாது நோக்காள்' என்பதற்கு, 'ஆண்மக்கள்வடிவை ஓவியத்தும் நோக்காள்' என்று கூறிய உரை மிகவுஞ் சுவைதந்து நயமுடையதாய் விளங்குகின்றது. இங்ஙனமே பிறரும்,

இவர்கண்மேலினியொருவர்பிழைத்தாரில்லை
யெழுகலிங்கத்தோவியர்களெழுதிவைத்த
சுவர்கண்மேலுடலன்றியுடல்களெல்லாம்
தொட்டீர்த்துப்பிடித்தடித்தார்சூராங்கே.
(கலிங்கத்துப்பரணி, சரு௯-ஆம் பாடல்.)

என ஓவியவடிவை எடுத்தாளுதல் காண்க.

அத்தம்மனையகளிற்றங்கர்மன்னன்மங்கை
முத்தம்முரிஞ்சுமுகிழ்மென்முலைமின்னனாளைப்
பைத்தங்கொர்நாகம்பனிமாமதியென்றுதீண்டச்
சித்தங்குழையற்கெனத்தீர்த்தவட்சேர்ந்தவாறும்.

என்னுஞ் செய்யுளில் 'பைத்தங்கொர்நாகம் பனிமாமதி என்று தீண்ட' என்னுமடிக்கு 'ஒருநாகம் (பதுமைமுகத்தை) மதியென்றுட்கொண்டு படம்விரித்து அது மறுச்சேர்மதியன்மையின் அவளைக் கையிலே தீண்டலால்' எனக் கூறிய உரை நோக்குந்தோறும் மிக இன்பம்பயந்துநிற்கின்றது.

அஞ்சாமணிப்பூட்சுரமஞ்சரியென்னுநாமத்
தஞ்சாயல்பூத்தவகிலார்துகிலாய்பொனல்கு
லெஞ்சாதவின்பக்கொடிதாழ்த்ததும்பன்றியெய்து
கஞ்சூறுவேலான்பகைநாமறக்கொன்றவாறும்.

என்னும் செய்யுளில் 'இன்பக்கொடிதாழ்த்ததும்' என்பதற்குக் 'கொடியை வளைத்தபடியும்' எனப் பொருள்கூறி, 'கொடியென்ற

லானும் (ஆணுருவை ஒவியத்து நோக்கேன் என்ற) விரதத்தை அழித்தலானும் 'தாழ்த்து'என்றார்' என்பதும்மிக வியக்கத்தக்கது.

நாமகளிலம்பகம்.

விண்புகுவியன்சினைமெலியப்பூத்தன
சண்பகத்தனிமலர்குடைந்துதாதுக
வண்சிறைக்குயிலொடுமயில்கண்மாறுகூஉய்க்
கண்சிறைப்படுநிழற்காவுசூழ்ந்தவே.

என்னுஞ் செய்யுளில், 'வண்சிறைக்குயிலொடு மயில்கண் மாறு கூஉய்' என்பதற்குக் 'குயில் மயிலொடு மாறுகூய்' என மாற்றிப் பொருள்கூறி அதற்கு விரிவுரையாகக், 'கார்காலத்து மயிலின் களிப்பைத் தானுட்கோடலின் மாறு என்றார்' என்று கூறியஉரை மிகவும் சுவைபயப்பதேயாம். என்னை? கார்காலத்து மயில் அகவிக் களிக்கும். குயில் சோர்வடையும்; வேனிலிற் குயில் கூவிக் களிக்கும்; மயில் சோர்வடையும்; இப்போது வேனிற்காலந்தோன்றினமையால், கார்காலத்தே அகவித் தன்னை வென்ற மயிலின் பழம்பகையை நினைத்துவைத்திருந்து இப்போது அதுசோரக் கூவிற்று என்பது அதன் கருத்தாதலின்.

திங்கண்முக்குடையான்றிருமாநக
ரெங்குமெங்குமிடந்தொறுமுண்மையா
லங்கண்மாநகர்க்காக்கமறாததோர்
சங்கநீணிதியாற்றழைக்கின்றதே.

என்னும் கக0-ஆம் செய்யுளில் 'ஆக்கம்—சங்கநீணிதியாற்றழைக்கின்றதே' என்பதற்குச் 'செல்வம் சங்கமென்னும் பேரெண்ணையுடைய தொன்றபட்ட நிதியோடே தழைக்கின்றது' என்று பொருள்கூறிப் பின் 'ஸ்ரீகோயில் உண்மையால் ஆக்கமறாது; அவ்வாக்கம் ஒரு சங்கநிதியாலே தளிர்க்கின்றது என்றுமாம். சங்கநிதி—அரசன்' என்று கூறிய உரை மிக நன்மையோடுகூடிச் சுவைதந்து நிற்கின்றது. இப்பொருட்கு அஃது ஒர் எனப் பிரித்தல்வேண்டும். ஆய்தம் விகாரத்தாற் றொக்கது.

குழவிக்கோட்டிளம்பிறையுங்குளிர்மதியுங்கூடினபோ
லழகுகொள்சிறுநுதலுமணிவட்டமதிமுகமுந்
தொழுதாற்குவரங்கொடுக்குந்தொண்டைவாய்தூமுறுவ
லொழுகுபொற்கொடிமூக்குமுருப்பசியையுருக்குமே.

என்னும் கஙகூ-ஆஞ் செய்யுளில், 'உருப்பசியையுருக்கும்' என்பதற்கு 'முகமுதலியன உருப்பசியை உருக்கும்' என்று பொருள் கூறி, '(உருப்பசியை) உருக்குதலாவது:-(அவற்றை) நுகர்தற்குத் தானும் ஆண்பாலாக விரும்புதல்' என்று விரித்திருப்பது மிகவுஞ் சுவையுடைத்து. இங்கே இராமாவதாரத்துக் கோலங்காண் படலத்து வரும்,

> கஞ்சத்துக்களிக்குமின்றேன்கவர்ந்துணும்வண்டுபோல
> அஞ்சொற்கள்கிள்ளைக்கெல்லாமருளினுளழகைமாந்தித்
> தஞ்சொற்கள்குழறித்தத்தந்தகைதடுமாறிநின்றார்
> மஞ்சற்குமாதரார்க்குமனமெனபதொன்றேயன்றே.

என்னும் உ0-ஆஞ் செய்யுளும், சூர்ப்பநகைப்படலத்துள்வரும்

> பண்புறநெடிதுநோக்கிப்படைக்குநர்சிறுமையல்லால்
> எண்பிறங்கழகிற்கெல்லையில்லையாமென்னநின்றாள்
> கண்பிறபொருளிற்செல்லாகருத்தெனினஃதேகண்ட
> பெண்பிறந்தேனுக்கென்றாலென்படும்பிறருக்கென்றாள்.

என்னும் செய்யுளும் ஒப்புநோக்கற்பாலன. இக் கருத்து, "ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்" எனக் கம்பரால் மேலுங் கூறப் பட்டுள்ளது காண்க.

> பளிக்கறைப்பவளப்பாவைபரிசெனத்திகழுஞ்சாயற்
> களிக்கயல்பொருவபோன்றுகடைசிவந்தகன்றகண்ணு
> ளொளிக்கவின்கொண்டகாமத்துழுறுகனியையொத்தா
> ளளித்தயில்கின்றவேந்தனஞ்சிறைப்பறவையொத்தான்.

என்னும் கஙகூ-ஞ் செய்யுளில், 'பளிக்கறைப் பவளப்பாவை பரிசெனத் திகழுஞ்சாயல்' என்பதற்குப் 'பளிக்குப்பாறையையடுத்த பவழப்பாவை இவளது தன்மையெனத் திகழும் சாயல். சாயல்-ஈண்டு ஒளியது மென்மை' என்றுகூறிப் பின், இதற்கு 'அடுத்தது காட்டும் பளிங்கைப் பவழப்பாவை தன்றன்மையாக்கினாற்போல அடுத்த மகளிர் தன்மையனை மாசனை (சச்சந்தனை) இவளும் (விசயையும்) தன்றன்மையேயாக்கிக்கொண்டாள் எனக் கதை கருதிய நயமுமுண்டு' எனக் கூறிய உரை மிகச் சுவைதந்து நயம்படநிற்றல் காண்க.

இங்ஙனம்,
சி. கணேசையர்.

ஹாஸமஹாகவி இயற்றிய

பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்.

[௧௭௪-அம் பக்கத் தொடர்ச்சி.]

நான்காவது அங்கம்.

வேலையாள்:—நீரில் விளையாடவிருப்பங்கொண்ட ராஜகுமாரி (வாஸவதத்தை) ஏறிச்செல்வதற்காகப் பத்திரவதியின் பாகனை மெய்காப்பாளனை எவ்வளவுகாலமாய்த் தேடியும் காணவில்லையே. ஐய! புஷ்பதந்சக! மெய்காப்பாளனை நீவிர் காணவில்லையா? என்ன சொல்லுகிறீர்? "அவன் சாருயம்விற்பவள்வீட்டில் நுழைந்து மதுவை அருந்துகிறான்" என்று? ஐய! நீவிர் போகலாம். (சிறிதுதூரம்போய்) இது சாருயம்விற்பவள்வீடு. அவனைக் கூப்பிடுகிறேன். மெய்காப்பாளனே! மெய்காப்பாளனே!

(திரைக்குள்) யார் இவன், இராஜவீதியில் மெய்காப்பாளனே! என்று என்னை விளிக்கிறான்?

வேலையாள்:—இந்த மெய்காப்பாளன் மதுவை அருந்தி மதுவை அருந்தி, சிரித்துச் சிரித்து, மதங்கொண்டு மதங்கொண்டு, செம்பரத்தம்பூப்போற் சிவந்த கண்களுடன் இங்கே வருகிறானே! இவன் முன்னே நான் நில்லேன்.

மெய்காப்பாளன்:—(அரங்கிற்புகுந்து) இராசவீதியில் என்னை விளித்தவன் எவன்? சாருயக்கடையிலிருந்து வெளியேறும்போது நான் காணப்பட்டேன்; மிகவும் சினங்கொண்ட என் மாமனர் "அமிருதமல்லகர்" நெய் மிளகு உப்பு இவைகளாற் காரமாகச் சமைக்கப்பட்ட இறைச்சித்துண்டை என் முகத்தில் எறிந்தார்.

யஸ்யாஃ ஸுராஹிஸ்ரிக்தா யஸ்யாஃ ஸுராஹிரநுவிஷ்டாஃ।
யஸ்யாஃ ஸுராஹிஃஸ்நாதாஃயஸ்யாஃஸுராஹிஃஸஞ்ஜ்ஞாவிதாஃ॥

மதுவையுண்டு மதங்கொண்டவர்கள் தன்யர்கள்; மதுவால் மேனிமுழுவதும் பூசப்பட்டவர்கள் பாக்கியவான்கள்; மதுவிலே மூழ்கிக் குளித்தவர்கள் கொடுத்துவைத்தவர்கள்; மதுவால் நினை ஊட்டப்பட்டவர்கள் அதிர்ஷ்டசாலிகளே.

பொருளின்மையால் தம்முடைய மனைவிமக்களுடைய துக்கத்தைக் கேட்டுத் துன்புறுமவர்கள் மதுக்குளத்தில் மூழ்கி என் துக்கத்தைத் தூரத்தள்ளக்கூடாது?

வேலையாள்:—(நெருங்கிவந்து) மெய்காப்பாளனே! 'உன்னை எவ்வளவுகாலமாகத் தேடுகிறேன். நீராட ஆசைகொண்ட ராஜ குமாரியால் "பத்ரவதி" காணப்படவில்லை. நீயோ மதங்கொண்டு இங்கே திரிந்துகொண்டிருக்கிறாய்.

மெய்காப்.—சரிதான்; அவளும் மதம்பிடித்தவள்; அதுவும் மதம் பிடித்தது; நானும் பித்தன்; எல்லாம் மதங்கொண்டதுபோலவே!

வேலையாள்:—எல்லாம் என்பது இருக்கட்டும். அரசமாளிகையிலிருந்து பத்ரபீடிகையை வெளியிற் கொணராமல் எங்கே அலைந்துகொண்டிருக்கிறாய்?

மெய்காப்:—இங்கே திரிகிறேன். இங்கே குடிக்கிறேன். இதனால் குடிக்கிறேன். பரபரப்பு வேண்டாம். என்ன செய்யவேண்டும்?

வேலையாள்:—ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவார்த்தைகள் வேண்டா. விரைவில் பத்ரவதியைக் கொணர்வாயாக.

மெய்காப்:—பத்ரவதி வரட்டும், வரட்டும். என்னால் பத்ரவதிக்கு அங்குசம் கொடுக்கப்பட்டது.

வேலையாள்:—இயற்கையிலே விநயமுள்ள பத்ரவதியை அங்குசத்தைக்கொண்டு என்ன செய்யமுடியும்?

மெய்காப்:—பத்ரவதி இங்கே வரட்டும், வரட்டும். ஓ! அதற்கு என்னால் கத்திகளாலான மாலை சூட்டப்பட்டது.

வேலையாள்:— பூமாலை அணிகிற அதற்கு இந்தமாலையால் என்ன பயன்? அதை உடனே அழைத்துவா.

மெய்காப்:—அது இங்கே அணுகட்டும். அதற்கு மணிகட்டினேன்.

வேலையாள்:—நீரில்விளையாட விருப்பங்கொண்ட பத்ரவதிக்கு மணியினால் என்ன பயன்? சிக்கிரம் பத்ரவதியை அழைத்துவா.

மெய்காப்:—அது இங்கே வரட்டும். அதற்கு ஒரு சாட்டை கொடுக்கிறேன்.

வேலையாள்:—சாட்டையால் என்னகாரியம்? பத்ரவதியை அழைத்துவா.

மெய்காப்:—அது இங்கே வரும் வரும். ஓ!

வேலையாள்:—ஓ! என்பது என்ன?

மெய்காப்:—ஓ! என்றால்.

வேலையாள்:—என்றால் என்ன?

மெய்காப்:—ஓ! பத்ர.

வேலையாள்:—என்ன? பத்ர என்று?

மெய்காப்:—ஓ! பத்ரவதி.

வேலையாள்:—என்ன பத்ரவதி.?

மெய்காப்:—பத்ரவதியும் வந்தது.

வேலையாள்:—உன்பேரில் குற்றமில்லை. அரசரின் ஆளை அழைத்து அவனுக்குச் சாராயத்தைக் கொடுத்த மதுவிற்பவள் பேரிலேயே குற்றம்.

மெய்காப்:—வேர் தளிர்த்துவருவதைக் கிள்ளிவிடக்கூடாது, என்று என்னாற் சொல்லப்பட்டது.

வேலையாள்:—ஹா! சத்தம் கேட்கிறதே?

மெய்க்காப்:—மதுவிற்பவளின் வீட்டைக் கோட்டாற்குத்தி இடித்துவிட்டுப் பத்ரவதி வெளியே ஓடுகிறது.

வேலையாள்:—என்ன சொல்லுகிறாய்?

(ஆகாயத்தில்) "வத்ஸராஜன் வாஸவதத்தையை அழைத்துக் கொண்டு வெளியேறினார்" என்று.

மெய்காப்:—(களிப்புடன்) தலைவருக்கு ஒருதடையும் வாராதிருக்கட்டும். (ஸ்விஸ்த்யஸ்து)

வேலையாள்:—குடி குடி. இன்றும் குடித்துவிட்டுத்திரிவாய்.

மெய்காப்:—ஆ! சீ! எவன் மதங்கொண்டவன்? எவனுக்கு மதம்? நாமோ ஆர்யர் யௌகந்தராயணரால் அவரவர்களின் ஸ்தானத்தில் வைக்கப்பட்ட ஒற்றர்கள். நானும் நண்பர்களுக்கு அறிவிக்கிறேன். இதோ அன்பர்கள், கட்டவிழ்த்துவிடப்பட்ட கருநாகங்கள்போல் இங்கும் அங்கும் ஓடிவருகிறார்கள். ஓ! ஓ! அன்பர்காள்! தாங்கள் கேட்பீர்களாக:

𑌨𑌵𑌂 𑌶𑌰𑌾𑌵𑌂 𑌸𑌲𑌿𑌲𑍈𑌃 𑌸𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌂
𑌸𑍁𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌂 𑌦𑌰𑍍𑌭𑌕𑍃𑌤𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌾 𑌭𑍂𑌨𑍍𑌨𑌰𑌕𑌂 𑌸 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍
𑌯𑍋 𑌭𑌰𑍍𑌤𑍃𑌪𑌿𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍇 𑌨 𑌯𑍁𑌧𑍍𑌯𑍇𑌤𑍍 ॥

நன்றாய்க் கழுவப்பட்டுத் தர்ப்பைகளால் மூடப்பட்ட புதுச் சட்டி நீரால் நிரப்பப்பட்டிருக்கிறது; ஆதலால் தலைவரால் கொடுக்கப்படும் சோற்றைத் தின்றும் எவன் சமயத்தில் போர்செய்யவில்லையோ, அவனுக்கு (ஒரு நன்மையும்) கிட்டாது; அவன் நரகத்தை அடைவான். ஆர்யர் யௌகந்தராயணர் எங்கே? ஓ! யௌகந்தராயணர்! இவர்,

𑌨𑌿𑌹𑌿𑌤𑌵𑌿𑌵𑌿𑌧𑌕𑌨𑍍𑌥𑌃 𑌸𑌂𑌹𑍃𑌤𑍋𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌵𑍇𑌷𑌃
𑌕𑌨𑌕𑌰𑌚𑌿𑌤𑌚𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌗𑍍𑌰𑌵𑌾𑌮𑌾𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌃 ।
𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌵𑌰𑌹𑌾𑌰𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌰𑌾𑌬𑌦𑍍𑌧𑌪𑌟𑍍𑌟𑌃
𑌸𑌤𑌡𑌿𑌦𑌿𑌵 𑌪𑌯𑍋𑌦𑌃 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍁𑌦𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥

பல கந்தைத்துணிகளையுடுத்த பித்தன்வேஷத்தைக் களைந்துவிட்டுக் கூர்மையானதும் பளபளப்பாயுள்ளதுமான கத்தியுடனும், பொன்னால் ஆக்கப்பட்டதோலுடன் விளங்குகிறதான இடக்கை நுனியுடனும், வெண்பட்டைப்போன்ற மேலாடையுடனும் சற்றுச் சந்திரனைக் காட்டிமறைக்கிறதான மின்னலைக்கொண்ட மேகத்தைப்போல் விளங்குகிறார்.

ஓ! பெரிய போர் தொடங்கப்பட்டது.

𑌹𑌤𑍍𑌵𑌾 𑌗𑌜𑌾𑌨𑍍 𑌸𑌗𑌜𑌿𑌨𑌃 𑌸𑌹𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌯𑍋𑌧𑌾𑌨𑍍
𑌅𑌕𑍍𑌷𑍌𑌹𑌿𑌣𑍀𑌰𑍍𑌦𑌿𑌵𑌿 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯 𑌬𑌲𑌾𑌨𑍍𑌦𑍍𑌹𑌾𑌰𑌿𑌤𑌮𑍍 ।

நாகேந்த்ரஹஸ்தைஸ்ஸஹஸாஹதஸன்னவாஹோ
ஹ்ருஷ்டாயுதோऽபி ந நிவ்ருத்தபதோऽபியாத: ॥

யானைப்பாகர்களுடன் யானைகளையும், குதிரைகளுடன் புரவியேறும் வீரர்களையும், அக்ஷௌஹிணி சேனையையும் ஒருமுகூர்த்த காலம் எதிர்த்துப் போர்செய்தார்; பெரிய யானைகளின் உலக்கைபோன்ற தந்தங்களால் ஒடிக்கப்பட்ட கைகளுடன், ஆயுதம் கீழே நழுவியும் காலைப் பின்வாங்காமல் அவர் எதிர்த்துச் செல்லுகிறாரே!

ஹா! சீ! பெரியோரான யௌகந்தராயணர் பிடிபட்டார்; நானும் அவருக்கு உதவிசெய்யப் போகிறேன். (வெளியேறுதல்.)

வேலையாள்:—இது என்ன? பிராகாரம் தோரணங்கள் நீங்கலாக எல்லாம் கௌசாம்பிநகரமாகிவிட்டதே; இந்தச் செய்தியை அமைச்சரிடம் அறிவிக்கிறேன். (வெளியேறுதல்.)

பிரவேசகம்.

இரண்டு சாதாரண ஆட்கள் (அரங்கிற்புகுந்து) ஆர்யர்களே! விலகுங்கள் விலகுங்கள்.

முதல்வன்:—ஓ! தொண்டைகிழியச் சத்தமிட்டாலும் நிற்கவில்லையே!

இரண்டாமவன்:— அரசகுமாரியை வெளியேற்றினதைக் குறித்து ஆச்சரியமடைந்து உரக்கச் சத்தமிடுகிற என் வசனத்தை ஒருவனும் கேட்கவில்லையே!

ஓ! என்ன சொல்லுகிறீர்கள்? எதற்காக ஆட்கள் விலக்கப் படுகிறார்கள்? என்றா? "ஆர்யர் யௌகந்தராயணர் பிடிபட்டார்" என்று. என்ன சொல்லுகிறீர்கள்? எப்படிப் பிடிபட்டார்? என்றா? ஆர்யர்கள் கேட்கவேண்டும். யௌகந்தராயணர் கையில் கத்தி வந்தி அக்ஷௌகிணிஸைன்யத்தின் முன் வேகத்தைச் சற்றுத் தடுத்தார்; விஜயஸுந்தரம் என்ற யானையின் தந்தத்தில் தாக்கிக் கத்திமழுங்கிவிட்டது. கத்தியின் குற்றத்தால் பிடிபட்டார்; அவர் குற்றத்தால் அன்று.

முதல்வன்:—நீங்கள் விழித்திருங்கள்; பிராகாரம் தோரணம் இவைநீங்கலாக இவ்விடம் கௌசாம்பியே.

இருவரும்:—ஆரியர் இங்கே இங்கே.

[பிறகு பலகையில் ஏற்றிக் கைக்கட்டுடன் யௌகந்தராயணர் அரங்கிற் கொணரப்படுதல்]

யௌகந்த:—நான் இதோ வந்தேன்.

ஸிவா ஹதவே நீய வத்ஸராஜம்
ருஹணாவெ தூ ணெ ஷ்ஸஸ்த்ரொஷாகு।
சுயகூஹவே நீத ஹதூக்ஷாஃவொ
ஜீதஜீதிராஜகூவெ ஸாவம் விஸாஜீ॥

பகைவரிடமிருந்த வத்ஸராஜரை மீட்டபிறகு, ஆயுதத்தின் குற்றத்தால் போரில் பிணிக்கப்பட்டும், தலைவரின் துக்கத்தை நீக்காமல், வெற்றியடைந்தவன்போல் ராஜகுலத்தில் நுழைகிறேனே!

ஓ! மனைவியை இழந்தவர்கள் கானகம் செல்வது நலம்; விரும்பியவற்றை நிறைவேற்றியபின் வீழ்தல் மிகவும் நல்லது; தர்மத்தைத்தேடியவர்களுக்குச் சாவினால் வருத்தம் இல்லை.

என்னாலோவென்றால்,

வைரம் ஹயம் பரிஹவம் ச ஸமம் விஹாய
க்ருத்வா நயைஸ்ச விநயைஸ்ச ஸரௌஸ்ச கர்ம।
ஸத்ரோஃ ஸ்ரியம் ச ஸுஹ்ருஜ்ஜநஶோகஸ்ச ஹித்வா
ப்ராப்தோ ஜயஸ்ச ந்ருபதிஸ்ச யஸோஸ்ச ஸபூஃ॥

பகைமையையும் அச்சத்தையும் அவமானத்தையும் ஒருங்கே விட்டும், நீதிகளாலும், விநயங்களாலும் அம்புகளாலும் முயற்சி செய்தும், எதிரிகளின் பெருமையையும், அன்பர்களின் இகழ்ச்சியையும் விலக்கியும், வெற்றியும் வேந்தரும் பெரியோன் எனும் பெயரும் அடையப்பெற்றனவே.

இருவரும்:—ஐயன்மீர்! விலகுங்கள் விலகுங்கள்.

யௌகந்த:—என்னைக் காண வரும் ஒருவனையும் தள்ளவேண்டாம்.

பஶ்யந்து மாம் நரபதே: புருஷா: ஸமஸ்தா:
ராஜாநுராக³நியதேந விட³ம்ப்³யமாநம் ।
யே ப்ரார்த²யந்தி ச மஹாமாத்யஶப்³த³ம்
தேஷாம் ஹ்ருதி³ ப⁴வது நஶ்யது வாபி⁴லாஷ: ॥

அரசரிடம் அன்புகொண்டவன் என்ற காரணத்தால் அழிகிறவனான என்னை, வலிமையுடையவர்களான ராஜபுருஷர்கள் பார்க்கட்டும். அமைச்சன் என்ற பெயரை எவர்கள் மனதினால் விரும்புகிறார்களோ, அவர்களுடைய ஆசை உறுதியுடன் இருக்கட்டும்; அல்லது அது ஒழியட்டும்.

இருவரும்:—ஆர்யர் யௌகந்தராயணர் இதற்குமுன் உங்களால் பார்க்கப்படவில்லையா?

யௌகந்த:—முன்பு பார்க்கப்பட்டிருப்பேன்; இந்த நிலைமையில் இல்லை.

உந்மத்தவேஷஸ்ய ரத்²யாஸு பரிதா⁴வத: ।
அவதீ⁴ரிதம் ரூபம் கர்ம ஸம்ப்ரதி த்³ருஶ்யதே ॥

பித்தன்வேஷம்பூண்டு வீதிகளில் ஓடுகிறவனான (என்னுடைய) இழிவான இந்த உருவம் (காணப்பட்டிருக்கலாம்); இப்பொழுது (என்னுடைய) முயற்சி காணப்படுகிறது.

வேலையாள்:—(அரங்கிற்புகுந்து) ஐய! உமக்கு அப்பிரியமான செய்தியை உரைக்கிறேன். வத்ஸராஜர் பிடிபட்டார்.

யௌகந்த:—அவ்விதம் இராது.

விமுக்தோ ரிபுநக³ரே நிரோத⁴முக்த:
ஸஹிதோ வநாந்யவலங்க்⁴ய ப⁴த்³ரவத்யா ।
க்ஷணமவாப்ஸ்யதி ப்ரயாதோ
நிஶிதைஸ்துரகை³ஸ்து போ⁴ஜநேஷு ॥

பகைவர்களில் சிறையிலிருந்து மீட்கப்பட்டும், 'பத்ரவதி'யுடன் கானகங்கள் கடந்தும், கணப்பொழுதில் வெகுதூரம்

சென்றபிறகா அவர் பிடிக்கப்படுவார்? நல்லோனே! எவ்விதம் பிடிபட்டார் என்று கேள்விப்பட்டாயா?

வேலையாள்:— 'நளகிரி'யைக்கொண்டு (அதன்மீது ஏறி)த் தொடர்ந்துசென்று பிடிக்கப்பட்டார்.

யௌகந்த:—வாகனசாமர்த்தியம் என்பதே வேறு.

கஜஸ்யாயோக நாயகேந ஜவோ பவதி ஶிக்ஷயா ।
விஸ்ருஷ்டம் வத்ஸராஜேந கஸ்தந்நாம வாஹயிஷ்யதி ॥

யானைப்பாகனால் பழக்கப்பட்ட யானைக்கு வேகம் அதிகம்; வத்ஸராஜனால் விடப்பட்ட யானையின்மீது எவன் ஏறிச் செலுத்துவான்?

வேலையாள்:—"ஆர்யர் ஆயுதசாலையில் அமர்ந்திருக்கலாம்; இந்த இடத்தில் ஜனங்கள் குழுமியிருக்கிறார்கள்" என்று அமைச்சர் சொல்லுகிறார்.

யௌகந்த:—ஓ! நகைப்புக்கு இடமாயிருக்கிறதே;

க்ஷிப்ரம் வ்யாப்ய வத்ஸராஜாஹ்வயாநம்
யஸ்மிந் காலே ஸர்வதோ ரக்ஷிதவ்யஃ ।
தஸ்மிந் காலே ஸ்வப்நஶீலைரமாத்யை
நீதே ரத்நே ஹாஜநே கோ நிரோதஃ ॥

வத்ஸராஜன் எனப் பெயர்கொண்ட அக்கினியை வளைந்து எப்புறத்திலும் எக்காலத்திற் காக்கவேண்டுமோ, அக்காலத்தில் அமைச்சர்கள் உறங்கினார்களே! இரத்தினம் கொண்டு போகப்பட்டபின், பெட்டியைப்பற்றி என்ன யோசனை?

வேலையாள்:—(சற்று நடந்து) இது ஆயுதசாலை; ஆர்யர் பிரவேசிக்கலாம் (அரங்கிற்புகுந்து) கட்டை அவிழ்த்துவிடலாமென்று அமைச்சர் சொல்லுகிறார்.

யௌகந்த:—என்னைவிட்டுச் சற்றுவிலகிக்கொள்வாய்; பரதரோஹகர் என்னைப் பார்க்கவிரும்புகிறார் என்று தோன்றுகிறது; நானும் அவரைப்பார்க்க ஆசைகொள்ளுகிறேன்.

உக்த்வா வாக்யை: பரிபிந்நஹ்ருதயம்
ரோஷாத் ப்ருஷ்டாக்ஷரை:
ப்ராப்தேஷ்வ நயபூர்வேஷ்வ சலிதம்
துல்யாதிகாரோஜ்ஜிதம் ।
ஸம்ப்ருத்தை: ஶாஸ்த்ரவிநிர்வ்ருத்தைர்விரஹிதம்
பர்யாயிகம் ஸம்ஹிதம்
த்ருஷ்டும் ஸ்வைரபக்ரியாவிநிஹதம்
ஹ்ரீணாவநம்ராநநம் ।

சினமிகுந்ததால் கடுமையுள்ளவைகளான என்சொற்களால் நெஞ்சுமுறிந்தவனையும், நீதிகுறைந்தபோது சற்று அசைந்தவனையும், ஒத்ததான அதிகாரத்திலிருந்து தள்ளப்பட்டவனையும், சாஸ்திரங்களுக்குச் சரியான நற்சொற்கள் (புகழ்) இல்லாதவனையும், மிகவும் புத்திகெட்டவனையும், கெட்டசெய்கைகளால் இழிக்கப்பட்டவனையும், வெட்கத்தால் தலைகுனிந்தவனையும் உள்ள பரதரோஹகனை நானும் காணவிரும்புகிறேன்.

பரதரோஹகன்:–(அரங்கிற் புகுந்து) யௌகந்தராயணர் எங்கே? எங்கே?

ஸுஸாதிதநிஜகார்யம் ஸம்வஞ்சநாப்ரதீக்ஷம்
க்ஷயமிவ பரிஹாஸே ஹந்தபர்தாரமேவ விபந்நம் ।
சிரசிந்திததந்த்ராயம் சாபி நிர்வ்ருத்ததந்த்ரம்
உரகமிவ ஸரோஷம் யஷ்டிதம் சோத்தம்ச ॥

தன்னுடைய காரியத்தை நன்கு நிறைவேற்றியவனும், வஞ்சனைகளைச் செய்ததாற் காணத்தகாதவனும், தன்னுடைய தலைவனுக்காகத் துன்பம் அடைந்தவனும், வெகுகாலம் ஆலோசித்துக் காரியத்தை முடித்தவனும், மிக்க தந்திரமுள்ளவனும், பாம்பைப் போற் சினமுள்ளவனும், கொர்வம்கொண்டவனும், மேன்மையுள்ளவனுமான அவனுடன் நான் எவ்விதம் வார்த்தையாடுவேன்?

வேலையாள்:—மேன்மைதங்கிய யௌகந்தராயணர், ஆர்பரை (தங்களை) எதிர்பார்த்துக்கொண்டு ஆயுதசாலையிலிருக்கிறார்.

பரதரோஹகன்:—இருக்கட்டும் இருக்கட்டும்.

உச்ச்ரித்வே வஞ்சிதோ ஹ்யேஷ ஸவ்யாஜம் நீலஹஸ்தினா ।
ப்ரத்யாதேஷ்டும் ஸ தத்வைரம் மாமிதோ நூனம் ப்ரதீக்ஷதே ॥

கபடமாய் நீலயானையால் அமைச்சரின் உதவிக்காரியத்தில் ஏமாற்றப்பட்டவனான இவன், பகையைத் தீர்ப்பதற்காக இப்போது என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்.

வேலையாள்:—ஐய! அமைச்சர் இதோ.

பரதரோஹகன்:—(நெருங்கிவந்து) ஓ! யௌகந்தராயணரே!

யௌகந்த:—ஓ!

வேலையாள்:—குரலில் என்ன கம்பீரம்? பெரியோரின் ஓரே அக்ஷரத்தால் இந்த இடம் முழுவதும் நிரப்பப்பட்டதே.

பரதரோஹகன்:—(உட்கார்ந்து) ஓ! "யௌகந்தராயணர்" என்ற பெயர்மட்டும் என்காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. இப்போது உம்மைக் கண்டதால் நிரம்பச் சந்தோஷம்.

யௌகந்த:—"உம்மைக் கண்டதால் சந்தோஷம்"

ஸஸ்வம் ரக்தாதிக்தாங்கம் வைரம் நிர்யாதயிஷ்யதம் ।
த்ரோணாபவர்ஜிதம் ஹத்வா ஸாந்தம் த்ரௌணிமிவ த்ரக்ஷ்யத ॥

இரத்தத்தால் பூசப்பட்ட அங்கங்களுடன் கூடியவனும், பகையை வெளிப்படுத்தவேண்டுமென்ற உறுதியுள்ளவனும் ஆன என்னை, தகப்பனைவென்றவனை விட்டுவைத்து அமைதியடைந்தவனான அசுவத்தாமனைப்போல் தாங்கள் காணலாம்.

பரதரோஹகன்:—ஓ! கபடமாய்வந்த யானையின் நடத்தையைப்பற்றித்தானே கூறிக்கொள்கிறார்.

யௌகந்த:—கபடமாய்வந்தது என்பதென்ன? அதுவே தக்கது;

யா ஸா ஸ்ரீக்ஷமாப்ருதக்ஷர்விதா நாகாஸ்ரிதா வஞ்சனா
வத்ஸேஶோ விதவானுபஸ்ய நாரவ திவ்யாஹவ்யயா நாம்க்ஷிதிஃ ।
ராஜ்ஞோ வாரணநிக்ரஹே பரிபவாதீணாஸ்ரிதா வஞ்சனா
வந்த்யம் ப்ராப்ய ததேவ யாதி பவிதா நைவாபவாதாயயோ ॥

மல்லிகைக்கொடிகளாலும் மரங்களாலும் மறைக்கப்பட்ட யானையைக்கொண்டு செய்யப்பட்ட சூழ்ச்சியால் எம் அரசர் கட்டப்பட்டுத் தன் கையையே தலையணையாகவைத்துத் தரையில் படுக்க நேர்ந்தது. அரசருக்கு யானைகளை வசப்படுத்தற்குதவியாயிருப்பதுகருதி வீணையும் கபடமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இது முன்பே சொன்னவிஷயமே. நான் செல்லுகிறேன். நம்மேல் குற்றம் ஒன்றுமில்லை; குற்றம் எல்லாம் எனதே.

பரதரோஹகன்:—சிஷ்யையாக ஒப்புவிக்கப்பெற்ற ராஜகுமாரியை அக்கினிசாக்ஷியாகக் கொடுக்கப்பெறாத நிலையிலும் கவர்ந்து செல்லலாயிற்றே. இது தக்கதோ?

யௌகந்த:—தாங்கள் அவ்விதம் உரைக்கவேண்டா. இதே எங்கள் தலைவருக்கு விவாகம்.

𑌭𑌰𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑍇 𑌜𑌾𑌤𑍋 𑌵𑌤𑍍𑌸𑌾𑌨𑌾𑌮𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌪𑌤𑌿𑌃 ।
𑌅𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌦𑌾𑌰𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌮𑍁𑌪𑌦𑍇𑌶𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

பரதகுலத்தில் ஜனித்தவரும், வத்ஸர்களுக்குச் சிறந்த தலைவருமான அவர் மனைவியென்றபெயரைக்கொடாமல் கற்பிப்பாரா?

பரதரோஹகன்:—இன்றும் வத்ஸராஜர் மகாஸேனரால் மரியாதைசெய்யப்படுகிறார். அவர் அதை அறிந்துகொள்ளவில்லையா?

யௌகந்த:—தாங்கள் அவ்விதம் உரைக்கக்கூடாது.

𑌯𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌨𑌲𑌾𑌗𑌿𑌰𑌿𑌃
𑌸 𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌚𑌨𑍇𑌷𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌤𑌤𑍋 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑌰𑌕𑍍𑌷𑌣𑍇
𑌯𑌶𑌃 𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑍁𑌂 𑌸𑍁𑌹𑍃𑌦𑌾𑌂 𑌚 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 ॥

"நளகிரி" அவருடைய உத்திரவுக்குக் கீழ்ப்படிகிறது; அது தன்னைப் பழக்கியவர்களின் சொற்படி நடக்கிறது; தம்முடைய சரீரத்தைக் காப்பதற்காகவும், புகழையும் அன்பர்களின் உயிரையும் நிறுவுவதற்காகவும், அவர் (வெளியில்) விடப்பெற்றார்.

பரதரோஹகன்:—நளகிரியை அடக்குதற்காக அவர் விடப்பட்டிருந்தால், மறுபடியும் அவர் கட்டப்படவில்லையே!

யௌகந்த:—மிகவும் சினங்கொள்வாரென்று அவர் கட்டப் படவில்லை.

பரதரோஹகன்:—ராஜ்யவியவஹாரத்தைக் கண்கூடாகக் காணுமல், தாங்கள் இவ்விதம் சொல்லுகிறீர்கள். போரில் வெல்லப்பட்டவர்களைக் குறித்துச் சாஸ்திரம் என்னசொல்லுகிறது?

யௌகந்த:—வதம்.

பரதரோஹகன்:—வத்ஸராஜர் கொல்லப்படத் தகுந்தவரானல், அவர் ஏன் மரியாதைசெய்யப்பெற்றார்?

யௌகந்த:—இதைநினைத்து அவருடைய சரீரம் அபகரிக்கப் படவில்லை.

பரதரோஹகன்:—இதுவும் நிகழக்கூடியதென்று எங்கள் தலைவர் எண்ணுகிறார்.

யௌகந்த:—என்ன சந்தேகம்?

𑌹𑌸𑍍𑌤𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌹𑌿 𑌵𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑍍𑌸 𑌨 𑌸𑌾𑌯𑌕𑍈𑌃 ।
𑌨 𑌹𑍍𑌯𑌨𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌨𑌾𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌯𑌤𑍇 ॥

கைக்குள் வந்தவரான தங்களுடைய அரசர் அந்த நல்லோரால் காக்கப்பெற்றார்; உயர்ந்ததான யானையின்மீது ஏருமல் கொடி (வைஜயந்தீ) வீழ்த்தப்படாதன்றோ?

பரதரோஹகன்:—இருக்கட்டும், இருக்கட்டும்; மகாசேனருக்குக் கெடுதியைவிளைத்துக் கௌசாம்பியைக் குறித்து என்ன எண்ணங்கொண்டீர்?

யௌகந்த:—ஓ! (உமது) சொற்கள் நகைப்புக்கு இடமாயிருக்கின்றனவே.

𑌸 𑌭𑌵𑌤𑌾𑌮𑌗𑍍𑌰𑌤𑍋 𑌯𑌾𑌤𑌃 𑌶𑍇𑌷𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑌾 𑌕𑌥𑌾 ।
𑌸𑌮𑍂𑌲𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌟𑍍𑌯 𑌶𑌾𑌖𑍋𑌚𑍍𑌛𑍇𑌦𑌂 𑌕𑍁𑌤𑌃 𑌶𑍍𑌰𑌮𑌃 ॥

தங்களுக்கு முன்னாலே அவர் சென்றார்; எஞ்சியகார்யங்களைப் பற்றி என்னகவலை? வேருடன் மரத்தைப் பிடுங்கித் தள்ளியபிறகு கிளைகளை அரிவதில் சிரமம் என்ன?

கஞ்சுகி:—(அரங்கிற் புகுந்து, காதில்) இவ்விதமாக.

பரதரோஹகன்:—வெளிப்படையாய் உரைப்பாயாக.

கஞ்சுகி:—(யௌகந்தராயணனை நோக்கி)

காரணைர்வ்யவஹாரைர்யுக்தை:
காமம் நாவஹ்ருதம் த்வயா ।
குணேஷு ந து தோஷேஷு
ஸம்ரம்ப: ப்ரதிக்ருஹ்யதாம் ॥

தங்களாற் கெடுதிசெய்யப்படவில்லையென்பது தகுந்த காரணங்களால் பிழையற வெளியாகியது. உங்கள் குணங்களில் எமக்குப் பகையில்லை; பொற்கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வீர்களாக.

யௌகந்த:—ஹா! சீ!

க்ருஹா ந நிர்வாந்தி யே ப்ரதீபிதா
ஸ்தைவ தாவத்த்ருதயானி மந்த்ரிணாம் ।
ஜயம் து வபூஜா ஹ்யபராதிண:
க்ருதாபராதஸ்ய ஹி ஸத்க்ரியா வத: ॥

என்னல் எரிக்கப்பட்ட வீடுகள் இன்னும் அணையவில்லை; அதுபோலவே அமைச்சர்களின் இருதயங்களும் (இன்னும் சமாதானம் அடையவில்லை); குற்றஞ்செய்தவனுக்குப் பூசைசெய்வது தகுதியில்லை; குற்றஞ்செய்தவனை வதைத்தலே பூஜையாகும்.

(அரங்கத்தில் ஹா - ஹா - என்றசத்தம்.)

பரதரோஹகன்—பருந்துகளின் சிறகுகளாலடிபட்ட அன்றிற் பறவைகளின் தொனியைப்போல், மாடத்திலிருந்து ஹா—ஹா— எனும் அரவம் கேட்கப்படுகிறதே; ஓ! சத்தம் எதனுலென்று அறிந்துவா.

கஞ்சுகி:—உத்திரவுப்படி. (வெளியேசென்று மறுபடியும் அரங்கிற் புகுந்து) துக்கத்தினுல் வருந்தியமனத்துடன் 'அங்காரவதீ' தேவி மாடத்திலிருந்து கீழே விழுந்து உயிரை இழக்க இருந்தபோது, அவளிடம் "க்ஷத்திரியதர்மத்தின்படி, உன் மகளுடைய விவாகம்

வேண்டப்பெற்றதே! களிப்படையவேண்டிய வேளையில் ஏன் துக்கப்படுகிறாய்? சித்திரப்பலகையில் வரையப்பட்ட வத்ஸராஜனுக்கும் வாஸவதத்தைக்கும் விவாகஞ்செய்யப்படட்டும்" என்று மகாஸேனர் உத்திரவிட்டார். அங்கே,

ஶ்ரீஜநெ நாவஸ்ய ஸஹஸா ஹர்ஷவ்யாகுலசக்ஷுஷா ।
க்ரியதெ ஸம்ப்ரதானேன ஸஸ்வா கௌதுகக்ரியா ॥

பெண்டிர்களால் திடீரென்று களிப்படைந்தும் விசனப்பட்டும் ஆநந்தம் நிறைந்த கண்களுடன் மணக்கார்யங்கள் நடத்தப்பெறுகின்றன.

யௌகந்த:—இந்தச் சம்பந்தத்தை மஹாஸேநர் அங்கீகரிக்கிறாரா? ஆனால் பொற்பாத்திரத்தைக் கொணர்வாயாக.

கஞ்சுகி:—ஏற்றுக்கொள்வீர்களாக. (அருகில் நீட்டுதல்.)

பரதரோஹகன்:—ஓ! யௌகந்தராயணரே! மகாசேனர் உமக்கு இன்னும் என்ன பிரியம் செய்யவேண்டும்?

யௌகந்த:—மஹாசேனருக்கு என்னிடம் அருள் பிறந்தால், அதைக்காட்டிலும் வேறெதை விரும்புவேன்?

பாதவாக்கியம்.

ஸஸ்யோஜஸோ காவ: ஸந்து ஶத்ரவ: ப்ரஶாம்யந்து ।
இமாமபி மஹீம் க்ருத்ஸ்னாம் ராஜஸிம்ஹ: ப்ரஶாஸ்து ந: ॥

பசுக்கள் தூசியற்றவைகளாகுக; பகைவரின் கூட்டங்கள் அடங்கட்டும்; நமது ராஜஸிம்மர் இப்பூமிமுழுவதையும் ஆளுபவராகுக.

(எல்லோரும் அரங்கத்திலிருந்து வெளியேறுதல்.)

நான்காவது அங்கம் முற்றிற்று.

பிரதிஜ்ஞா நாடிகை முற்றிற்று.

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.

மதுரை.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(கஅசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஐபீரியயுத்தம்: கி. மு. 218—214

சகோதரர்களாகிய ஸ்கிப்பியோ என்போர் சாம பேத தான தண்டத்தால் ஐபீரியரை அடக்கினர். கன்னேவை வென்றதுமன்றி கி. மு. 217-ல் ஒருகப்பற்போரிலும் அவர்கள் வெற்றியெய்தினர். கி. மு. 216ல், ஹனிபாலின் தம்பி ஹஸ்துருபாலையும் ஐபோராக் களத்தில் வென்றார்கள். கி. மு. 215-ஆம் ஆண்டு இலிற்றேக்காவிலும் உரோமர் பினீசியரை வென்றனர். இலிவியஸ், ஸ்கிப்பியோ என்போரைப் பெரும் வீரரெனப் புகழ்ந்தனர்: ஸ்கிப்பியோவென்பாருள் ஒருவன் இரண்டுகப்பலோடு ஆபிரிக்காவுக்குத் துணிந்து சென்றான் எனவும் ஒரு கதையுண்டு. ஸ்கிப்பியோ ஆபிரிக்கவேந்தன் சிபாச்சிடம் துணைவேண்ட அப்பொழுதிலேயே ஹஸ்துருபால் கிஸ்கோவும் சிபாச்சிடம் துணைவேண்டினன் என்றும், ஸ்கிப்பியோ நாவல்லமையாலும் சாதுரியத்தாலும் துணைபெற்றான் எனவும் இலிவியஸ் எழுதிய வரலாறு கூறுகின்றது. ஸ்கிப்பியோ என்னுங் குழுவினர் இலிவியஸ் என்னும் புலவனைப் புரந்தமையால் இவ்வரலாறு நம்பத்தக்கதன்று. நடந்த உண்மையென்னவெனின் ஹஸ்துருபாலும் மாகோவும் படைசேர்த்து உரோமரைப் புடைத்து ஸ்கிப்பியோ என்றழைக்கப்படும் சகோதரரிருவரையும் கொன்றனர் என்பதே. கி. மு. 207-ல் ஸ்கிப்பியோவின் மகன், ஸ்கிப்பியோ ஐபீரியாவுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். இந்த ஸ்கிப்பியோவும் சிபாச்சுவேந்தனிடம் துணைபெற்றான். ஸ்கிப்பியோ புதிய காதாக்கோவை மோதிக் கைப்பற்றினன். மாகோ காடிஸ்துறைக்குப்போய் ஆங்குள்ள கோயிலில் நுழைந்து, பொன்முதலிய விலையுயர்ந்த பொருள்களைக்கொண்டு படைதிரட்டி ஆபிரிக்காவுக்குத் திரும்பினன். கி. மு. 204ல், ஸ்கிப்பியோ இணைத்தலைவருள் ஒருவனாகி உற்றிக்காவுக்குச்சென்றான். சிபாச்சுவேந்தன் கஸ்துருபாலின்

மகள் சபனிஸ்பாவை மணஞ்செய்து பினீசியரைச் சார்ந்தான். சிபாச்சின் எதிரி மசினிசா என்பான் உரோமருக்குச் சார்பாயினன். மசினிசா ஸ்கிப்பியோவின் துணையோடு சிபாச்சைவென்று தான் முன் காதலித்த சபனிஸ்பாவை மணஞ்செய்துகொண்டானென ஒருகதை உண்டு. இதுநிற்க.

கி. மு. 212-ஆம் ஆண்டு இராறந்தம் ஹனிபாலின் ஆட்சியை எற்றது. உரோமர் கப்புவாநகரை முற்றுகையிட்டனர். ஹனிபால் உரோமாபுரியை நோக்கிச் செல்ல உரோமர் கப்புவாவைவிட்டு ஹனிபாலைப் பின்றொடர்ந்தனர். லுக்கேனியாவில் ஹனிபால் உரோமரைப் புடைத்து 15000 வீரரைக்கொன்றான். தலைவன் புலிவியஸ் 18,000 படையோடு ஹனிபாலை எதிர்த்துத் தோல்வியடைந்தான். கி. மு. 211ல் உரோமர் கப்புவாநகரைப் பின்னரும் முற்றுகையிட்டனர். ஹனிபால் கப்புவாநகரத்தாருக்குத் துணைபுரியமாட்டாமல் உரோமாபுரத்தை நண்ணினான். உரோமர்படை பின்றொடராது கப்புவாநகரத்தைத்தாக்க, நகர் உரோமர்வசமாயிற்று. கி. மு. 211-ல் இலவீனஸ் மசிடோனியா தேசத்திற்குச்சென்று அயிற்றோலிய கிரேக்கரை வேந்தன் பிலிப்புக்கு எதிராகத் தூண்டினன். 210ல் இலவீனஸ் மாக்கேலஸ் என்போர் இணைத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் சம்நிதியநாட்டுச் சில நகரங்களை அடக்கினார்கள். ஹனிபால் தலைவன் கெந்துமாலனையும் 13,000 வீரரையும் கேடோனியாவிற் சந்தித்து முரிய அடித்தான். கி. மு. 209ல் உரோமர் இராறந்தத்தைத் தாக்கினார்கள். அடுத்த ஆண்டு அந்நகர் உரோமர்வசமாயிற்று. பின்னர் உரோமர் லொக்கிறிநகரை முற்றுகையிட்டனர். ஹனிபால் பெற்றியாலாவில் உரோமரோடுபொருது வென்றான். அப்போரில் தலைவன் மாக்கேலஸ் இறந்தான். ஹனிபால் தலைவனின் உடலைத் தகனஞ்செய்து முறைப்படி கிரியைகளைச் செய்வித்தான். இவ்வெற்றிகளைக் கேள்வியுற்ற இலத்தீனியரும் எற்றூறியரும் ஹனிபாலுக்கு உதவிபுரிந்தனர்.

கி. மு. 208ல் உரோமர் நீரோவை 12,000 படையோடு ஐபீரியாவுக்கு எகும்படி கற்பித்தனர். ஹனிபாலின்தம்பி ஹஸ்துருபால் அல்புமலையைக் கடந்து கல்லியருடைய துணைபெற்று

48,000 காலாட்படையோடும் 8000 குதிரைப்படையோடும் உரோமாபுரத்தைநோக்கிச் சென்றான். இதற்கிடையில் நீரோ இத்தாலியாவுக்குத்திரும்பி இணைத்தலைவருளொருவனோடு தென்னித்தாலியாவிலே வைகினான். ஹஸ்துருபால் தான் துணைப்படையோடு வந்துசேர்ந்ததை அறிவித்துத் தன்னை எப்பிரியம் என்னும் இடத்தில் சந்திக்கும்படி தமயனுக்குத் தூதனுப்பினான். அத்தூதர் நீரோகையில் அகப்பட்டனர். நீரோ பினீசியப்படை இரண்டும் சந்திக்குமுன் பொருதல் அவசியமென எண்ணித் தெரிந்தெடுத்த ஒருபடையோடு தென்னித்தாலியாவிலிருந்து வடபால் விரைந்தான். வடவித்தாலியாவிலே இலிவியஸ் சலினேற்றஸ் என்னும் இணைத்தலைவருளொருவன் ஹஸ்துருபாலை எதிர்த்தற்குப் பாசறையமைத்திருந்தான். பக்கத்தில் நீரோவும் தன்பாசறையை அமைத்தான். இரண்டுபாசறைகளையும் கண்ட ஹஸ்துருபால் தமையன் தோல்வியடைந்திருக்கக்கூடுமென ஐயுற்று மெற்றோறஸ் நதிவழியே சென்றான். காடடர்ந்த சதுப்புநிலமாகலின் வழிதெரியாமல் இராக்காலமுழுவதும் பினீசியர்ப்படை அலைந்தது. உரோமர் தம் படையை வைகறையில் அணிவகுத்தனர். ஹஸ்துருபால் ஐபீரியரை வலத்திலும் கல்லியரை இடத்திலும் நிறுத்திப் பொருதான். பினீசியர் தோற்றார்கள். ஆசிரியர் பொலிபியஸ் 10000 பினீசியர் இறந்தனர் என்றும், ஆசிரியர் இலிவியஸ் 45000 வீரர் இறந்தனர் என்றும் எழுதினார்கள். நீரோ ஹஸ்துருபாலின்தலையை வெட்டி எடுத்துச்சென்று ஹனிபாலின் பாசறையுள் எறிந்தான். இக் கையற்ற நிலையில் ஹனிபால் புறாற்றியத்திற்குப் பின்வாங்கினான். கி. மு. 204ல் பினீசியர் மாகோவையும் ஹனிபாலையும் காதாக்பட்டினத்தைக் காத்தற்குத் திரும்பும்படி அழைத்தனர். ஹனிபால் தான் பதினைந்துவருடமாகச்செய்த போர்வரலாற்றைச் செப்பேடுகளில் வரைந்து லுக்கேனிய முனையில் அமைக்கப்பட்ட யூனோதேவியின் கோவிலில் பதித்து ஆபிரிக்காவுக்குப் பெயர்ந்தான். ஹனிபால் யுத்தவரலாற்றைக் கிரேக்கமொழியிலும் பினீசியமொழியிலும் எழுதினானாகலின், பொலிபியஸ் என்னும் வரலாற்றாசிரியன் அவ்வரலாற்றைப் படித்தான்.

ஹனிபால் தன் படையை மாகோவின்படையோடு சேர்த்துப் பாசறையமைத்து மாரிக்காலத்தைக் கழித்தான்; கி. மு. 202-ல் மசினிசாவை ஹனிபால் அடக்கினுன்; பின்பு சாமா என்னும் களத்தில் உரோமர்படையோடு தனது கடைசிப்போரைச் செய்தான். 50000 வீரர்களை மூன்றுவரிசையாக நிறுத்தினுன். முதல் வரிசையில் கூலிப்படைவீரராகிய லிகூறியர் கல்லியர் ஐபீரியர் என்போர் நின்றனர். இரண்டாம்வரிசையில் ஆபிரிக்கரும் காதாக்கினியரும் நின்றனர். மூன்ரும்வரிசையில் ஹனிபாலின் பழைய வெற்றிவீரர் நின்றனர். தூசிப்படையாக 80 யானைப்படைகள் நின்றன. இருபக்கங்களிலும் குதிரைப்படைகள் நின்றன. ஸ்கிப்பியோ 30,000 படையோடு முன்வரிசையைத்தாக்க முன்வரிசையோர் முதுகிட்டனர். முன்வரிசைவீரரும் இரண்டாம்வரிசை வீரரும் தம்முள் முரண்பட்டுப் பொருதனர். பினீசியர்படை அணிகுலைந்து தோற்றது. ஹனிபால் சமாதானம்செய்தற்குத் தூது அனுப்பும்படி சபையாருக்கு அறிவித்தான். ஸ்கிப்பியோ 'ஆபிரிக்கன்' எனப் பட்டம்பெற்று வெற்றிவிழாக் கொண்டாடினுன். இரண்டாம் பினீசியயுத்தமுடிவில் எழுதப்பட்ட உடன்படிக்கை உரோமரது கொடுமையை வெளிக்காட்டுகின்றது. பினீசியர் பத்துக்கப்பலைத்தவிர ஏனையவற்றை உரோமருக்கு அளிக்கவும், 10000 பொன் (Talents) திறையளிக்கவும் மசினிசாவை நுமிடியா நாட்டுக்கு வேந்தனுக்கவும், ஐபீரியாவை உரோமருக்கு அளிக்கவும், உரோமரது உத்தரவின்றிப் பிறநாட்டாரோடு போர் தொடுக்காமலிருக்கவும் உடன்பட்டார்கள். போரின் முடிவில் உரோமர் இத்தாலியா முழுவதையும் ஐபீரியாவையும் ஆட்சி செய்தனர். உரோமர் குடிகளில் காற்பங்கினர் இறந்து தொலைந்தனர். சிறு கமக்காரரும் குறைந்தனர். ஊர் முழுவதும் தொழிலற்ற வீரரும் வீணரும் முரடரும் அடிமைகளும் நிரம்பினர். உரோமர் வேளாண்மையைக் கைவிட்டு ஆடுமேய்த்தலை விழைந்தனர். உரோமர்தலைவர்கள் திரவியந்தேடலே நோக்கமாகக் குடிகளைத் துன்புறுத்தினுர்கள். யுத்தகாலத்தில் மேன்மக்கட்சபையே சகல அதிகாரங்களையுஞ் செலுத்தியதாகலின் பொதுசனசபையான வகுப்பினர்சபை பல உரிமைகளை இழந்தது.

யவனதேசம்.

யவனர் பண்டைக்காலந்தொட்டே நாகரிகமடைந்த மக்கட் சாதியினராக மதிக்கப்பட்டனர். கணிதநூல்வல்லோர் இயற்கை நூல்வல்லோர் பௌதிகநூல்வல்லோர் தத்துவநூல்வல்லோர் கவின்கலைவல்லோராகிய பலரும் யவனநாட்டோரே. இயலிசை நாடகமென்னும் முத்தமிழும் சிறப்புற்றோங்கியகாலத்தே யவனப் புலவர்களும் இசைப்பாட்டுக்களையும் காப்பியங்களையும் நாடகங் களையும் இயற்றி யவனமொழியைச் சிறப்பித்தனர். ஓவியர் சிற்பர் யந்திரஞ்செலுத்துவோர் முதலிய வித்தைவல்லோர் பற்பல நுட்ப மான வேலைகளைச் செய்தனரெனத் தெரிகிறது. உலகிற் புகழ் பெற்ற கலைஞர் பலரும் யவனரே. சாக்கிரட்டீஸ் பிளேற்றோ அரிஸ்தாதில் முதலிய ஞானிகளும், ஹோமர் யுறிப்பிடிஸ் முதலிய புலவர்களும் டெமஸ்தனிஸ்நாவலனும் தெமிஸ்டோக்கிளிஸ் அமைச்சனும் அலெச்சாந்தர் முதலிய படைத்தலைவரும் தத்தம் நாட்டில் ஒப்பற்ற பெருமக்களெனக் கூறலாம். அலெச்சாந்தர் கிரேக்கநாடுகள்யாவற்றையும் ஒரு குடையின்கீழ் ஆண்டு, பர்சியரைவென்று சின்னசியா பர்சியா எகிப்து முதலிய தேசங்கள் யாவற்றையும் ஆட்சிசெய்தார். அவர் இந்துநதிவரையும் வந்தனர் என அறிகிறோம். அவர் மேலைநாடுகள் நாகரிகமற்றனவாதலின் அவற்றை அடக்கக் கருதவில்லை. அலெச்சாந்தர் மரிக்கவே கிரேக்கர் தனிக்கோலும் நிலைகுலைந்தது. சிற்றரசர்கள் திசைதிசை தோறும் எழுந்தனர். யவனதேசத்திற் சிற்றரசுகள் மிகுந்தன. அலெச்சாந்தருடைய தந்தையின் நாடான மசிடோனியா ஒரு சிறு இராச்சியமாயிற்று. ஸ்பாட்டா எபிரேஸ் திறேஸ் முதலியவை குறு நிலமன்னரால் ஆளப்பட்டன. வேறு சில நகரங்கள் குடியரசு முறைகளைத் தழுவின. பல சிற்றரசுகள் சேர்ந்து அயிற்றோலியர் கூட்டமென ஓர் ஐக்கியக்கூட்டமாக நிலைத்தன. வேறு பல குறு நிலமன்னரும் குடியரசுநகரங்களுஞ் சேர்ந்து ஆக்கியர்கூட்டமென நிலைத்தன. சிற்றரசுகளும் கொடுங்கோலரசுகளும் குடியரசுகளும் ஐக்கியக்கூட்டங்களும் ஒன்றோடொன்று இகலலாயின.

மசிடோனியயுத்தம். கி. மு. 200—197.

மசிடோனியாவை அலெச்சாந்தர்வழிவந்தோனாகிய பிலிப்பஸ், ஆண்டான். பிலிப்பஸ் ஹனிபாலுக்குத் துணைபுரிய எண்ணியும்

கிரேக்கநாட்டுக் கலகங்களால் துணைப்படைகள் நல்காதிருந்தான். கி. மு. 214-ல் இலவீனஸ்தலைவன் கிரேக்கநாட்டுக்குச் சென்று குறுநிலமன்னர் ஒருவரோடொருவர் மாறுகொள்ளும்படி வேற்றுமைப்படுத்தினான் என முன்னர்க் கூறினோம். ஆக்கியர் பிலிப்பின்பக்கம் சார, அயிற்றேலியர் ஆக்கியரோடு பகைத்தமையால் உரோமர்கட்சியைச் சார்ந்தனர். ஸ்பாட்டாநாட்டுக் கொடுங்கோலன் மக்கினதாஸ் பிலிப்போடு பகைத்தான். எதென்ஸ்நகரும் மசிடோனியாவோடு பகையாயிற்று. சின்னாசியாவிலுள்ள பேர்காம் நாட்டுமன்னன் அத்தாலஸ் உரோமருக்குப் பொருளுதவிசெய்து சிரியாநாட்டுவேந்தனுக்கு எதிராகப் படையுதவிபெற்றான். கி. மு. 211-ல் கல்பாவும் இலவீனஸ் தலைவனுடைய உபாயத்தைப் பின்பற்றி உரோமரது அதிகாரத்தை நாட்டினான். கி. மு. 205-ல் கலகம் ஒழிந்து சமாதானம் ஏற்பட்டது. பிலிப்பஸ் நாட்டை நன்மாதிரியாக ஆண்டு வீரரைப் படைப்பயிற்சியிற் பழக்கினான். அக்காலத்து எகிப்துவேந்தன் தாலமி அவுலேற்றிஸ் சிறுவனாகையால் எகிப்தையும் சைப்பிறஸ்தீவையும் சிரியாவேந்தன் அந்தியோக்கஸும் பிலிப்பும் பங்கிடக் கருதினராக, தாலமி உரோமரிடம் துணைவேண்டினான். அச்சமயத்தில் எதென்ஸ் நகரத்தாரும் பிலிப்புக்கு எதிராக உதவிபெறுதற்கு ஒற்றரை உரோமாபுரத்திற்கு அனுப்பினார்கள். கி. மு. 200-ல் மேன்மக்கட்சபையோர் மசிடோனியரோடு யுத்தஞ்செய்யவேண்டுமெனத் தீர்மானஞ் செய்தனர். இச்சந்தர்ப்பத்தில் இரண்டாம் மசிடோனியயுத்தம் தொடங்கியது. உரோமர்துணைவன் அத்தாலஸ் உடனே துணையனுப்பினான். அயிற்றேலியரும் ஆக்கியரும் நொதுமலாயிருந்தனர். பிலிப்பஸ் கொறிந்துநகரை முற்றுகையிட்டான். கி. மு. 199-ல் கல்பா தன்படை சிறிதாகையால் போரை நீட்டித்தான். அடுத்தஆண்டு பிளாமினியஸ் தன் படையோடு இறங்கி அயிற்றேலியரிடம் துணைப்படைபெற்றுப் பிலிப்பை அவோ பள்ளத்தாக்கில் வென்றான். பிலிப்பு சமாதானம் வேண்டினான். பிளாமினியஸ் பின்னரும் பிலிப்பைச் சேனைசைபல்லாயிக்களத்தில் வென்றான். கி. மு. 197-ல் எழுதிய உடன்படிக்கையின்படி பிலிப்பஸ் பிறநாடுகளை இழந்ததுமன்றி உரோமருடைய உத்திரவின்றிப் பிறநாட்டா

ரோடு யுத்தஞ் செய்யும் உரிமையையும் இழந்தான். அதனுடன் 1000 பொன் (Talents) உரோமருக்கு இறுக்கவும் உடன்பட்டான். பிளாமினியஸ் கிரேக்கநாட்டிற் செய்த ஏற்பாட்டைச் சிற்றரசர் வெறுத்து உரோமரோடு உட்பகையாயிருந்தனர். அயிற்ரோலியர் தாம் உதவிசெய்தமைக்கு வெகுமதி காத்திருந்தும் பெறுமையால் உரோமரோடு உட்பகையாயினர். ஆக்கியர் அயிற்ரோலியர் முதலியோரின் வலிமை மிகுமென எண்ணி மசிடோனியரின் படைகளை உரோமர் அதிகம் குறைக்கவில்லை.

சிரியா யுத்தம் கி. மு. 191—190.

சிரியாவேந்தன் அந்தியோக்கஸை ஹனிபால் உரோமருக் கெதிராகத் தூண்டிக்கொண்டே அவன் கோயிலில் வைகினன். கி. மு. 190-ல் அயிற்ரோலியர் தாம் உரோமருக்கு எதிராகத் துணைசெய்வதாக ஒற்றன்மூலமாகச் சிரியாநாட்டுவேந்தனுக்கு அறிவித்தார்கள். அந்தியோக்கஸ் பிலிப்போடு போர்புரியக் கிரேக்கநாட்டில் இறங்கினன். உரோமர் பிலிப்புக்கு உதவிசெய்தனர். அத்தாலஸ் சிறுமன்னனும் உரோமர் துணைவனுகையால் பிலிப்புக்குத் துணைப்படையனுப்பினன். ஆக்கியர் அயிற்ரோலியரின் பகைவராகையால் உரோமர்பால் சார்ந்தனர். உரோமர் தலைவன் கிளாபிறியோ 40000 படையோடு சென்று அந்தியோக்கஸைத் தேமாப்பயிலாயிக் களத்தில் வென்றனன். கி. மு. 190ல் ஸ்கிப்பியோ மக்னீசாவிலே அந்தியோக்கஸை வென்றான். இவ்வண்ணம் சின்னசியாநாடுகள் உரோமராட்சிக்குட்பட்டன. அந்தியோக்கஸ் 15000 பொன் கப்பங் கட்டினன். சில நாடுகளையும் இழந்தான். பேர்காமாநாட்டு அத்தாலஸ் மன்னனுக்குப் பிரதியுபகாரமாகச் சில நாடுகள் அளிக்கப்பட்டன.

மூன்றும் மசிடோனிய யுத்தம். கி. மு. 171—168.

உரோமர் சின்னசியாநாடுகளை அடக்கித் தம்மாணையைச் செலுத்தினர்கள். கி. மு. 189-ஆம் ஆண்டு, வல்சோத்தலைவன் கலேசியர் என்னும் சின்னசியாநாட்டாரை அடக்கினன். தலைவன் கொபிலியர் அயிற்ரோலியரை யடக்கினன். பிலிப்பஸ் இறந்தபின் பிலிப்பின் அரண்மனையில் பிலிப்பின்மகன் பேர்சியஸ் அரசுபுரிந்தான். பேர்சியஸ் மசிடோனியாநாட்டின் படை குடி கூழ் முதலிய

வற்றைப் பலவழியாலும் பெருக்கமுபன்றான். அயிற்றோலியர் சிரியர் காதாக்கினியர் முதலியோரை பேர்சியஸ் நட்டாராக்கினான். கி. மு. 107-ல் கிருசஸ் தலைவனின் படையைப் பேர்சியஸ் ஒசாக் குன்றில் வென்று உரோமரோடு உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பினான். கிருசஸ் மறுத்துப் போர்க்கெழுந்து பின்னரும் பாலாணக் களத்தில் தோற்றான். கி. மு. 170-ல் படைத்தலைமையை கொஸ்திலியஸ் என்னும் தலைவனிடம் ஒப்புவிக்கும்படி மேன்மக்கள் கிருசஸ்தலைவனுக்கு அறிவித்தனர். கி. மு. 169-ல் கன்னையிப்போரில் மாண்ட பவுலஸ் என்போன்மகன் பவுலஸ் தலைவனாக நியமிக்கப்பட்டான். உரோமர் தெம்பி என்னும் ஊரைப்பற்றி நின்று பித்னாவில் பொருது 20,000 பகைவரைக் கொன்றார்கள். உரோமர் மசிடோனியாதேசத்தை நான்குபிரிவுகளாகப் பிரித்து நான்கையும் திறையளிக்கும் நாடுகளாக்கினர். உரோட்ஸ்தீவார் பேர்சியஸ்வேந்தனுக்குத் துணைபுரிந்தமையால் தம் சுயாதீனத்தை இழந்தனர். பேர்காமம் உரோமருக்கு உதவிசெய்தும் ஒருநன்றியும் பெறவில்லை. மூன்றாம் யுத்தமுடிவில் மசிடோனியா உரோமரது ஆட்சிநாடாயிற்று.

நான்காம் மசிடோனிய யுத்தம். கி. மு. 149—146.

கி. மு. 149-ஆம் ஆண்டு, ஒருவன் தான் பேர்சியன் மகனென விளம்பி மசிடோனிய ராச்சியம் தனது உரிமையாகலால் உரோமரைத் துரத்தத்தொடங்கித் தெசாலியிலிருந்த உரோமர் கீழ்த் தலைவனை வென்று படைசேர்த்தான். கி. மு. 148-ல் உரோமர் தலைவன் மெற்றஸ் அவனைச் சயித்து மசிடோனியாவை உரோமரது ஆட்சிநாடாக்கினான். இது நிற்க. ஆக்கியர்கூட்டம் ஸ்பாட்டாவுக்கு எதிராகப் போர்செய்ய, உரோமர் மேன்மக்கட்சபை போரை நிறுத்தும்படி கற்பித்தது. பின்னர் கி. மு. 146-ஆம் ஆண்டு ஆக்கியர்கூட்டம் ஸ்பாட்டாநாட்டாரோடு போருக்கெழுந்தது. உரோமர் ஆக்கியரை அடக்கிக் கொறிந்துநகரை அழித்து ஆங்குள்ள சித்திரப்படங்கள் சிலைகள் அருந்தொழிலமைந்த கலன்கள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு உரோமபுரத்துக்குச் சென்றனர். ஆக்கியர்கூட்டத்தின் நாடுகள் உரோமருடைய ஆட்சிநாடாயின. கிரேக்கதேசம் சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. இங்

னம் கிரேக்கர் தம்முள் ஒற்றுமையில்லாமைனல், தம்மோடு கல்வியாலும் பயிற்சியாலும் ஒப்பில்லாத உரோமருக்கு அடிமையாகித் தம் நாகரிகத்தை இழந்தற்குரியநெறியிற் செல்லாநின்றனர். கிரேக்கர் சுயாதீனமிழந்தாராயினும் கிரேக்கரது நாகரிகம் உரோமரால் தழுவப்பட்டது. பின்னர்ப் பல நூற்றுண்டுகளுக்குப் பின்பு, கிரேக்கர் ஒட்டோமன் துருக்கரின் கொடுமையால் அழிவெய்தினர்.

ஐபீரிய தேசம்.

பினீசியயுத்திகாலத்தில் அடக்கப்பட்ட கல்லியர் திரண்டெழுந்து முயிற்றினக்களத்தில், கி.மு. 193-ஆம் ஆண்டு தோல்வியடைந்தனர். உரோமர் இத்தாலியக் கல்லியநாடுமுழுவதையும் அடக்கி, லிகூறியரையும் அடக்கினர்கள். லிகூறியர் இத்தாலியக் கல்லியநாட்டிற்கும் கல்லியநாட்டிற்கும் இடையிலுள்ள சிறு நாட்டில் வசித்த வில்வீரர். உரோமர் ஐபீரியதேசத்திற்கும் இத்தாலியா தேசத்திற்கும் இடையான பாகங்களேயும் தம் ஆட்சிக்குட்படுத்த எண்ணினர். ஐபீரியர் உரோமரது பழக்க வழக்கங்களேயும் அரசியல்முறையையும் வெறுத்தனர். கி. மு. 196-ல் உரோமர் கீழ்த்தலைவன் ஒருவனை ஐபீரியர்கொல்ல மேன்மக்கட்சபையோர் கேற்றேவை ஐபீரியரை அடக்கும்படி கற்பித்தனர். பலவாண்டுகளாக ஐபீரியரை அடக்கவியலாமையால் போர் நீடித்தது. கி. மு. 179-ல் கிறுக்கஸ் தயவாலும் தந்திரத்தாலும் உரோமராட்சியை நாட்டினன். கி. மு. 153-ஆம் ஆண்டு சுல்பீசியஸ் கல்பா லூசித்தானியவீரரைப் பிறநாடுகளில் குடியேறுவதற்குக் கூடும்படி ஏமாற்றியழைத்துக் கூடினேரை ஒருங்கு கொன்றுன். ஐபீரியர் யாவரும் சீற்றங்கொண்டு மறத்தொழில் வீரன் விரியாதனைத் தலைவனுக்கினர்கள். கி. மு. 149-ல் உரோமர் விரியாதனைக் கொல்வித்து லூசித்தானிய நாட்டோரை அடக்கினர்கள். கி. மு. 143-ல் நுமாந்தியர் போர்க்கெழுந்து மாசியஸ் தலைவனையும் அவன் படையையும் சூழ்ந்தனர். உரோமர்தலைவன் படையைக் காத்தற்காகச் சமாதானத்திற்கு உடன்பட்டு இழிவடைந்தான். மேன்மக்கட்சபையார் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படாமல் தலைவனைப் பகைவரிடம் ஒப்பிவித்தார்கள். கி. மு.

134-ல் நூறியஸ் ஸ்கிப்பியோ அமீலியானஸ் என்போன், ஐபீரியரின் ஆற்றலைக்காணிய காதோக்கோப் பட்டினத்துக்குச் சென்றான். கி. மு. 133-ல் ஸ்கிப்பியோ நுமாந்தியாநகரையும் அழித்தான். உரோமர் ஐபீரியரை ஒருவாறு அடக்கியும் அவர்கள் மூர்க்கம் அகஸ்தஸ் என்பவருடைய காலம்வரையும் அடங்கியதன்று.

போக்கியஸ் கேற்றோ.

போக்கியஸ் கேற்றோ இரண்டாம் பினீசியயுத்தத்தில் ஒரு இளைஞனாகப் படையிற் சேவித்தான்; அவன் பின்னர் மேன்மக்கட் சபையங்கத்தினனாகி ஸ்கிப்பியோவின் எதிரியானான்; கி. மு. 205-ல் பொருட்கணக்கனாகத் தெரியப்பட்டான். கி. மு. 195-ல் கேற்றோ கீழ்த்தலைவனாகத் தெரியப்பட்டு ஐபீரியாவிற்குச் சென்றான். பின் கிலாபிறியாத் தலைவனோடு கிரேக்கநாடுசென்று மசிடோனிய யுத்தத்தில் கீழ்த்தலைவனாகச் சேவித்துத் தேமோப்பைலாயி வெற்றியிலும் பங்குபெற்றான். கி. மு. 184-ல் கேற்றோ உரிமைக்கணக்கனாகத் தெரியப்பட்டான். உரிமைக்கணக்கனாகக் கடமையைச் செலுத்தியகாலைச் சிலர் கேற்றோவை வெறுத்து நாடு கடத்தவும் முயன்றனர். பொதுமக்கள் அவன் ஒழுக்கத்தையும் சீலத்தையும் போற்றினாராகையால் கேற்றோ தீங்குகளுக்குத் தப்பினான்; கேற்றோ தலைவர் எத்திறத்தாராயினும் குற்றஞ்செய்துழிச் சபையில் எழுந்து அவர்களைக் கண்டிக்கும் ஆண்மையுடையவனாக விளங்கினான். காதாக்கோப்பட்டினம் தழைத்தோங்கியதாகையால் சொற்பொழிவுநிகழ்த்தும்போதெல்லாம் காதாக்கோப்பட்டினத்தை அழிக்கவேண்டும், அழித்தாற்றான் உரோமராச்சியம் நிலைக்குமென வற்புறுத்தினான்; அவன் 80 வயசினனாகி கி. மு. 149ம் ஆண்டு துஞ்சினான். அவன் காலத்து மேன்மக்கள் பொருளாசையுடையாராதலால் அவனது ஆண்மை கொடை அளிமுதலிய நற்குணங்களைப் பொதுமக்களும் மேன்மக்கட்சபையினரும் நனி பாராட்டினார்கள்.

[தொடரும்.]

உ

காவை வடமலையப்பபிள்ளையன்.

[இலக்கணவிளக்க ஆசிரியர்பரம்பரை S. சோமசுந்தரதேசிகர்.]

வடமலை என்ற சொல் தமிழ்நாட்டெல்லையாகக் கூறப்படும் திருவேங்கடமலையைக் குறிக்கும். வடமலையப்பன் என்பது திருவேங்கடத்தின்கண்ணே கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானைக் குறிக்கும். கடவுளர்பெயரை மக்களுக்கு இட்டு வழங்குவது பெருவழக்காகலின் வடமலைப்பெயரும் பெருவழக்காயுளது. ஆயினும் அப்பெயர்கொண்டு சிறப்புற்று ஓங்கியவர் ஒரு சிலரேயாவர். அவர்களும் பற்பலகாலங்களிலே வாழ்ந்தவராவர் என்பது கல்லெழுத்துக்களாலும் நூல்களாலும் அறியக்கிடக்கின்றது.

பதினாறும்நூற்றாண்டில் மிக்க சிறப்புடன் அரசாட்சிசெய்த விஜயநகர அரசரான கிருஷ்ணதேவராயருக்கு நன்மதியமைச்சராயும் தமிழ்நாட்டுத்தலைவராயுமிருந்தவர் ஒரு வடமலையண்ணலையன். இவர் திருவேங்கடமுடையாருடைய மகன். இருசமய விளக்கம் இயற்றிய அரிதாசரான கிருஷ்ணனுக்கு மூத்தோர். பிற்காலத்திலே நாகலாபுரம் எனப் பேர்பெற்ற அரிவாஸபுரத்தினர்.[1]

மற்றொருவர் நீடூர்த்தலபுராணம்[2], மச்சபுராணம் முதலிய நூல்களை யியற்றியவரும் காரிரத்தினகவிராயரால் புலவராற்றுப்படை[3] பெற்றவரும், நாரணக்குடையான் கோத்திரத்தினருமான இரசை வடமலையப்பபிள்ளையன். இவர் பதினெட்டாம்நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். காவை வடமலையப்ப பிள்ளையனின் பேரராவர்.

---

[1] தமிழ்ப்புலவர் வரலாறு. XVI நூற்றாண்டு. பக். 25.

[2] நீடூர்த்தலபுராணம், திருப்புகழ் அச்சிட்ட வ. த. சுப்பிரமணியபிள்ளையால் அச்சிடப்பட்டுளது.

[3] புலவராற்றுப்படை, மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் 4-வது செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிடப்பட்டது.

ஈண்டுக் கூறப்புகுந்தது தலைப்பிற் குறித்தபடி காவை வடமலையப்பபிள்ளையனைப் பற்றியே யாகும். இவர்தம்மைக் காவை வடமலையப்பரென்றே யாண்டும் கூறப்பட்டிருத்தலினாலே இவர் காவையம்பதியினர் என்பது பெறப்படும். காவை யென்பது மதுரைமாநகருக்கு அடுத்ததாகவுள்ள 'மன்றலஞ்சோலைக் குன்ற நன்னாட்டிலே பூவலர்வாவி' சூழ்ந்த ஊராகும். இது இப்பொழுது காவனூர் என்று வழங்குகிறது. வடமலையப்பர் காவையில் தொன்றுதொட்டு வந்த ஒரு பழங்குடியிற் றோன்றியவர். அக்குடி பல பெரியார்களை யுடையது. இவர் அம்பலவாணர் அம்பலவாணத்தம்பிரானார் என்றும் கூறப்பெறுவர். இவர் பிராசாத அகவல்[1] என்றொரு சைவசித்தாந்தநூல் இயற்றியுள்ளார். அந் நூலிலே,

> 'குன்ற மெறிந்த வென்றிவேலன்
> போற்றிவா னவர்தொழ வீற்றினி திருக்கும்
> மன்றலஞ் சோலைக் குன்றநன் னாடும்
> பூவலர் வாவிக் காவையம் பதியும்
> வளர்திகழ் திசையுடன் விளங்க வந்தோன்
> அம்புவி புகழ்திரு வம்பல நாதன்'

என்று காணப்படும் அடிகட்கு உரைகண்ட பெரியார் 'கிரவுஞ்சமென்னும் மலையைப் பிளந்த வெற்றிப்பாட்டினையுடைய குமாரசுவாமியைத் தேவர்கள் தோத்திரஞ்செய்து வழிபடச் சிங்காதனத்தி லெழுந்தருளியிருக்கும் மணம்பொருந்திய சோலையும் சரவணமும் பொருந்திய திருப்பரங்குன்றினைச் சூழாநின்ற நல்ல நாட்டினையும் தாமரைப்பூ அலராநின்ற வாவியினையுமுடைய காவை யெனப் பெயர்வழங்கிய திருப்படைவீடும் வளப்பத்தைத் தாரா நின்ற பத்துத்திக்கிலும் இனியசொல்லுடன் எங்குங் கீர்த்தி பிரகாசியாநின்றோன், அழகிய புவியின்கண் எல்லோராலும் தோத்திரஞ் செய்யப்படாநின்ற திருவம்பலவாணனென்னும் பிள்ளைத்திருநாமத்தையுடைய ஆசாரியன்' என்று எழுதிச்செல்லுகின்றார். ஆதலினாலே காவை என்ற ஊர் திருப்பரங்குன்றுக்குப்பக்கத்திலுள்ளது என்பது வெளிப்படையாவதோடு வடமலையப்பர் அப்பதியிலேயுள்ள ஒரு

---

[1] பிராசாத அகவல் உரையுடன் என்னால் 1934-ல் பதிப்பிக்கப்பட்டுளது.

பழங்குடியினர் என்பதும் விளக்கமாம். இவர்கள் கார்காத்த வேளாண்மரபினராவர். 'பண்ணவன் முகில்காத்த காராளர் திலகனாங் காவை வடமலையப்பபிள்ளை'[1] என்று வடமலைவெண்பா கூறும். இவர் மதத்தில் சைவராயினும் திருமால் பத்தியிற் குறைந்தவரல்லர். இவர்குடும்பத்தார் மதுரைத் திருஞானசம்பந்தர்மடத்தில் பற்றுடையவர்களென்று அறியக்கிடக்கின்றது. இவரது சீலம் ஒழுக்கம் குடிமரபு முதலியவைகளைக் கண்ட மதுரைநாயக்கவரசர்களுள் சீரும் சிறப்புங்கொண்டு அரசாண்டுவந்த திருமலைநாயக்கர் இவரைத் திருநெல்வேலிச் சீமைக்காரியத்துக்குக் கர்த்தராக நியமனஞ்செய்தார். கயத்தாற்றுச்சீமையிலே மாதைத் திருவேங்கடநாதரும் திருநெல்வேலிச்சீமையிலே இவரும் ஆண்டுவந்தார்கள். இச்செய்தியை,

'பொன்னி கலக்கிப் புகாரைப் புகுந்துழக்கிச்
சென்னி யுறந்தை திறைகொண்டு—முன்னடந்த
வல்லங் குருத மகதங் குடிவாங்கக்
கொல்லங் கடாரங் குடைக்கொதுங்கச்—செல்லுங்காற்
கப்பங் கொணர்ந்திருதாள் கைகுவித்துத் தங்கள்குறை
செப்புந் திருமுன்றிற் றேவேந்த்ரன்—ஒப்பரிய
செய்யதமிழ்க் கச்சித் திருமலைய பூபாலன்
வையமுழு தும்புரக்கு மானபரன்—துய்ய
திருமலை ராயன் சிகாமணி மேருப்
பொருபுய னுல்லாச போசன்—அருள்புரியும்
புண்ணியமாம் செல்வம் புரக்குங் கரியமுகில்
வண்ணன் கருணை வடமலையான்—எண்ணரிய
மானு பரணன் வடமலைப்பூ பாலனருந்
தேனூர் குவளைத் திருமார்பன்—மானபரன்
....
வடமலை பூலோக மன்னன்'

என்று தேன்திருப்பேரைக் குழைக்காதர் திருப்பணிமாலை கூறுகின்றதாகலின்,[2] இவர் திருமலைநாயக்கருடைய பிரதிநிதி என்பது இனிது பெறப்படும். இவர் தயை, பொறை, சாந்தம், அடக்கம் முதலான பெருங்குணங்கள் வாய்ந்தவர்.

---

[1] வடமலைவெண்பா, வாழ்த்து.

[2] கண்ணி 119—127.

இவரது ஆட்சித்திறன்,

'...கடலுலக
மெல்லாம் பொதுநீக்கி யெங்கணுஞ்செங் கோனடத்து
மல்லார் தடந்தோள் வடமலையான்—கல்விக்கு
மாறு வளமைக்கு மன்புக்குங் கேண்மைக்கு
மாறு பிமான மகிமைக்குஞ்—சேறு
முகத்துக்குஞ் செங்கோல் முறைமைக்கும் நீதி
யகத்துக்குந் தானொருவ னன்றேன்—செகத்திற்
பாக்குங் கலிக்கோடை பற்றற்று நீங்கத்
தூக்குந் தினதான சூரன்.........
...............அபிராமன் போசன்
மனுநீதி குன்றாத வள்ளல்[1]......
....வாதுசொல்லித்
தாண்டுஞ் சமர்க்களத்துத் துன்னலர்வெம் போர்முறியத்
தாண்டும் பரிகுலன் சங்க்ராமன்—பூண்டுலகில்
மன்னுயிர்கள் யாவு மனுமுறையா னன்றோறுந்
தன்னுயிர் போற்புரக்குந் தன்மையால்—இன்னுயிர்
வேறாய் நிலைபிரிந்து விட்டாலும் சொன்னமொழி
மாறா வரிச்சந்த்ரன் மானபரன்—தேறார்
பறையளக்கும் நெஞ்சம் பதைபதைப்ப வந்து
திறையளக்குந் தேவேந்த்ர சிங்கம்—முறைதவறா
மன்னன் கருணை வடமலை பூபாலன்[2].

என்று பேரைக் குழைக்காதர்திருப்பணிமாலையிற் பாராட்டப்பட்டுள்ளது. வைத்தமாநிதிதிருப்பணிமாலையும்

'வித்வசெனப் பிரீதி செய்யும் விதரணிகன்
சங்கிராம வீமன் அன்ன
சத்திரநயச் சோமன்வட மலைமகீ
பதியுலகந் தாங்கு மாலே'

'நாடியா தரித்தபுகழ் வடமலைபூ பதிகாவை நகரினனே'

என்று பாராட்டிக் கூறும்[3]. இவர் குடிகளின் நன்மையைப் பெரிதும் பேணியவராவர். கொல்லம் அ௬அ-ஆம் ஆண்டு சுபகிருதில்

---

[1] கண்ணி 128—132.

[2] ௸ 156—161

[3] செய். 58, 59.

இவரிடம் விக்கிரமசிங்கபுரத்திலிருந்த வலங்கை உய்யக்கொண்டார்களில் பெரும்பற்று—செவ்வந்திநாடான், மற்றுண்டான பேர்கள் நொந்து கெட்டுப்போனபடியினாலே வரியை இறக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, இவரும் இவரது சகோதரரும் பின்னுஞ் சிலருடனிருந்து பகுதி கார் அறுபத்துநாலுபொன்னும் பிசானம் அறுபத்துநாலுபொன்னும் கொடுக்கும்படி அறுதி செய்ததாக[1] விக்கிரமசிங்கபுரம் கீழைத்தெருவிலுள்ள கற்றூண் இன்றும் சான்றுபகர்ந்துநிற்கின்றது.

ஒருகாலத்தில் இவருடைய காரியஸ்தர்கள் தென்திருப்பேரையிலுள்ளவர்கள் அரசிறையிறுக்காததுகண்டு அவர்களைச் சிறையிட்டு ஒறுத்தபோது, அச்சிறைக்கூடத்திலிருந்த நாராயண தீக்ஷிதர் என்ற பாவலர் குழைக்காதரைத் துதிக்கையில் 'வடமலையப்பர்முன்னே விள்வாருமில்லை'[2] என்று கூறித் துதித்தார். இச்செய்தியையறிந்த பிள்ளையன் உடனே அவர்களைச் சிறையினின்று நீக்கியதுமன்றி உபசாரமும் செய்ததாக ஒருகதை வழங்குகிறது.

பின்னும் ஒருக்கால் டச்சுக்காரர்கள் கடற்கரையோரமாக வந்து திருச்செந்திலில் இறங்கி நாட்டைச் சூறையிட்டதுமன்றிச் செந்திலாண்டவனையும் தூக்கிச் சென்றதாகவும், உடனே பெரும் புயலொன்று அடிக்க மரக்கலம் தடுமாறுவதைக் கண்ட கப்பலோட்டிகள் தெய்வக்கோளென்றெண்ணிச் செந்தில்நாயகத்தைக் கடலிலிட்டுச்சென்றதாகவும் ஒருகதை வழங்குகிறது. இச்செய்தி திருநெல்வேலிஜில்லா கெஜட்டிலும் காணப்படுகிறது.[3] முருகப்பெருமானைத் தீயோர் தூக்கிச்சென்றனரென்று கேட்டவுடனே திடுக்கிட்ட காரியகர்த்தர் வடமலையப்பபிள்ளையன் ஊணுறக்கமின்றியிருக்க, நள்ளிரவில் பெம்மான் கனவிற்றோன்றித் தாம் கடலுளாழ்ந்துகிடக்கும் நிலையைக் காட்டியதாகவும் விடிந்தெழுந்து பிள்ளையன் அவ்விடஞ்சென்று கடலினின்றும் எம்பெருமானைக் கரைசேர்த்து மறுமுறையும் நிலைநிறுத்தியதாகவும்

---

[1] M. E. R. 297 of 16.

[2] இது குழைக்காதர் பாமாலையிலுள்ளது.

[3] Tinnavelley Gazetteer, i. 506

ஒருகதை வழங்குகிறது. இச்செய்தியைக்குறித்துக் கூறுங் கவிகளும் கீர்த்தனங்களும் பல உள. இது நடந்தது கொல்லம் 829-ஆம் ஆண்டு விஜயவருடம் தைமாதம் 23-ஆம் தேதி வெள்ளி வாரம் பூர்வபட்சத் திரயோதசியோடுகூடிய புணர்பூசநாள் அன்று மிதுனலக்கினத்தில் "காரேறு தண்டலைசூழுஞ் செழுந்தமிழ்க் காவை வடமலையப்பன் பிரதிட்டை செய்தான்"[1] என்று வென்றி மாலைக் கவிராயர் பாடியுள்ளார்.

நாட்டுக்கதிபதியான இவர் பல புலவர்களை ஆதரித்தவராவர். இவர்காலத்தில் வாழ்ந்தவர் திருச்செந்திலில்வாழ்ந்த திரிசுதந்தர ரென்னும் முக்காணியருள் ஒருவரும் திருச்செந்தூர் ஸ்தல புராணம் பாடியவருமான வேன்றிமாலைக்கவிராயர். இவர் பிள்ளையன் முருகப்பிரானைக் கொண்டுவந்து தாபனஞ்செய்ததைக் கீர்த்தன மாகப்பாடியுள்ளார்.

இவரது அரசியல் முதலியவற்றின் நேர்மையைக் குறித்துப் பாடியவர்களுள் வடமலைவெண்பாவின் ஆசிரியரும் ஒருவர். இவரை ஏகசந்தக் கிராகி என்று அந்தநூலின் அச்சுமுகப்பேடு கூறும். வடமலை வெண்பாவின் அச்சிட்டபிரதியில் காப்புச்செய்யுளிரண்டும் வாழ்த்துச்செய்யுள் ஒன்றும் அறம்பொருள்களைக்குறிக்கும் செய் யுட்கள் நூற்றெட்டும் ஆக 111 செய்யுட்கள் காணப்படுகின்றன.[2] இவற்றுள் பதின்மூன்றுபாக்களில் 'காவை வடமலையே' என்று இவர் விளிக்கப்பட்டுள்ளார். இவரையன்றிப் பின்னும் பலர்

---

[1] இச்செய்யுள் வடமலைவெண்பாவில்அச்சிடப்பட்டுள்ளது. இதனைக் குறித்த கல்வெட்டொன்றும் செந்தமிழ் 9-ஆவது தொகுதியில் வெளிவந் துளது. அது வருமாறு: 'சகாத்தம் 1595-ன் மேல் செல்லாநின்ற கொல்லம் 829 விஜயவருடம் தைமீ 23-ஆம் தேதி வெள்ளிக்கிழமையும் திரயோதசியும் சிவயோகமும் சிவகரணமும் பெற்ற புணர்பூசத்தில் மிதுனலக்னத்தில் விஸ்வநாதநாயக்கர் அய்யன் திருமலைநாயக்கர் அய்யன் வடமலையப்பபிள்ளை அய்யன் இவர்களை ரக்ஷிக்கும்பொருட்டாக, சுவாமி எழுந்தருளினர்.'

[2] வடமலைவெண்பா கொல்லம் ௯௪௩ வைகாசிக்கு நேரான அங் கிலவாண்டு 1768-ல் ச. சுப்பிரமணியபிள்ளையால் திருநெல்வேலி முத் தமிழாகர அச்சாபீசில் பதிப்பிக்கப்பட்டது.

வடமலை என்னும் பெயருடையராய் இருந்திருக்கவேண்டுமென ஊகித்தற் கிடனுண்டு. இவரது புத்திரன்காலத்திலே யியற்றப் பெற்ற முக்கூடற்பள்ளிலே 'கோவிற்பெரிய வடவேந்திரன்' என்றும் (83) 'நயினர் வடமலையப்பர் பேரிட்டு' என்றும் (132) காணப் படுகின்றன.

இவர் கல்விச் செல்வம் உடையவராகவிருந்ததேயன்றி மக்கட் செல்வமும் உடையவராவர். இவரது திருமகனரே திருமலைக் கொழுந்துப்பிள்ளை. இவர்மேல் திருமலைவெண்பா என ஒரு பிரபந்த முண்டு. வடமலையாருக்கு இத்திருக்குமாரரையன்றி ஒரு பெண்ணு முண்டு. அப்பெண்ணின் புத்திரனே இரசை வடமலையப்பபிள்ளைய னவர். அவர்களுடைய சரித்திரவிரிவு மற்ருெருமுறை கூறுவேன்.

இங்குக் கண்ட காவை வடமலையப்பபிள்ளையனுடைய காலம் திருமலைநாயக்கருடைய காலமேயாகும். திருமலைநாயக்கர் கி. பி. 1623 முதல் 1663 வரையிலாண்டதாகச் சரித்திரக்காரர் கூறுவர்.[1] 'துன்மதிவருஷ முதல் .... பின் பவ வுஷ வரைக்கும் ஞ சய வரைக்குஞ் சீமை யாண்டார்' என்று பிறிதொரு நூல் கூறும். அஃதெவ்வாறுயினும் வடமலையப்பர் முன்கூறிய விக்கிரமசிங்கபுரம் கல்லெழுத்திற் கண்ட கொல்லம் 838 புரட்டாசி கழித்துச் சிறிது நாளுள் இறந்துபட்டார் என்று கொள்ளவேண்டியிருக்கிறது. கொல்லம் 839 ஆனி மீ 20 உ இவர்மகன் வடமலையப்பபிள்ளை அவர்களுக்குப் புண்ணியமாகக் குமரித்துறைச் சக்கரதீர்த்தக் கரையிலுள்ள திருஞானசம்பந்தர்மடத்துக்கு மடப்புறமாகப் பல மானியங்கள் விட்டாரென்று ஒரு கல்வெட்டிற் காணப்படுகிறது.[2] அதே யாண்டு ஆவணி மீ 19 உ வடமலைப்பிள்ளை புண்ணியமாகக் கல்லணையொன்று கட்டினுரென்று பிறிதொரு கல்வெட்டுக் கூறும்.[3] ஆகவே வடமலையப்பபிள்ளை கொல்லம் 839-ல் பரகதி யடைந்தாரென்பது உறுதி.

1 The Nayaks of Madura

2 T. A S V. 199—200.

3 M E R 480 of 16

வடமலையப்பபிள்ளையன் செய்த திருப்பணிகளாவன:--

சங்கரநயினர்கோயில் திருப்பணி.

.....................................சேரவிடைப்
பாகனுமை யாவுடைய பாவைதிருச் சந்நிதியில்
மாகமுயர் பொற்கம்ப மண்டபமும் - தோகையென
மாடகசல் யாழிசைத்து மாதர் நடம்புரிய
ஆடகத்தூணிரைத்த வம்பலமும் - சூடு முடி
அண்ட ருறைபு மகல்வான் முகடுரிஞ்சும்
கொண்டல் படியுநெடுங் கோபுரமும் - எண்டிசைநெல்
இட்ட களஞ்சியமு மேற்ற மடைப்பளியும்
வட்டநெடு வான்றோய் மணிமதிலும் - கட்டுகொடிப்
பொற்றடந் தேருமந்தப் பொற்றடந்தேர் மண்டபமும்
மற்றை நிருதிதிக்கு மண்டபமு - முற்றவளம்
சேர்ந்தமணி வீதித் திருமடமும் பூந்தேறல்
வார்ந்தொழுகும் பூங்கா வனங்களும் - சார்ந்திலங்கு
கூலமணித் தெப்பக் குளமுமணி மண்டபமும்
சீல மறையோர் திருமனையும் - நீலமிடற்
றெந்தைவெள்ளிக் குன்றநடந் தேய்ந்தவர ராசைதனில்
வந்ததன்ன வெள்ளிவரை வாகனமும் - புந்திமகிழ்
வெண்கதிர் வெள்ளிவெற் பன்னவிடை வாகனமும்
வண்கனகத் திந்திரவி மானமும் - ஒண்சுடர்
கொண்டுதிகழ் வெள்ளியங் கோளரி வாகனமும்
மண்டு திறற்பூத வாகனமும் - தொண்டருடன்
வானவர் போற்றுமொரு மண்டல விழாவுமணி
ஆன வடமலை யாரமும் - ஞானவொளி
அன்னையுடை யாட்குரத்ன வங்கியு மெய்யன்பை
முன்னு மறுபத்து மூவரும் - மன்னுகுண
சீலனுயர் காவைத் திருமால் வடமலைபூ
பாலன் வகுத்த படிபாரீர்.[1]

---

[1] சங்கரன்கோயில் திருப்பணிகள் சங்கரலிங்கஉலாவிற்கண்டவை. இவ்வுலா, மகாமகோபாத்யாய டாக்டர் வே. சாமிநாதையாவர்களால் 1933-ல் பதிப்பிக்கப்பட்டது.

திருக்கோளூர்த்திருப்பணி.

வண்டிமிருங் கோளூரில் வாழ்வைத்த மாநிதிக்கு
விண்டொடுபொற் கோபுரவி மானமுதற்—கண்டு?
நேடித் தொழப்பொலிந்து நின்றநெடு மாயனுக்கே
யாடித் திருநா ளமைப்பித்து—நீடுபுகழ்த்
தேசத் தெவருந் தெரிசிப்ப வேசொற்க
வாசற் றிருநாளும் வைப்பித்து............

ஆழ்வார்திருநகரித் திருப்பணி.

அரியதுழாய்ப் பெம்மா னருஞ்சிகரஞ் சூழ
விரியுமணி மண்டபமும் வெள்ளிப்—பரிகலமு
மாடக் கொடியுயர்...............
மாடத் திருக்குருகூர் மாநகரிற்—கூடவே
யெல்லா வளமு மியற்றிமறை நான்குமுது
சொல்லா மதுரச் சுவைகனிந்து—நல்லார்
செவிமடுத் தானந்தந் தேக்கெறிய முன்னூற்
கவிமதம் பெய்யுங் களிறு—புவிமீது
சங்கத் தவர்தந் தனிக்குறும்பு மாய்த்துடைய
நங்கைக் கொருமகவாம் நாவீறன்—பொங்குமணிச்
சங்கணியான் செம்பதுமத் தாள்பரவுந் தூயதுறைச்
சங்கணியா னெங்கள் சடகோப—துங்கமணி
கோயிலி னுன விமானங்......
யேய தடந்தே ரினிதமைத்துப்—பாயிருள்
சீக்குந் திருவா பரணமுஞ் செவ்விபல
வாக்கும் வடவேங் கடமாலு—மேக்குயர்ந்த
தாரணியில் மெத்தத் தசாவதா ரம்முதலாங்
காரணமெல் லாஞ்செய்து கையமைத்து—
....
வன்னக் கனக வரைமூன்றும்...
கன்னித் திருமதிலுங் கட்டிவைத்துப்—பன்னுமறை
வந்தியா நிற்கு மறையோர்க் கரசடியிற்
சந்தியா மண்டபமுந் தாபித்துச்—சிந்தைதிக
ழாதிமறை நூற்றெண்மர்க் கக்கிரகா ரங்கொடுத்து

நீதியுல கிற்படைத்த நேமியான்—......

....

மன்னன் கருணை வடமலைப்பூ பாலன்மகிழ்ந்
திந்நிலத்து வாழி யினிது.[1]

வைத்தமாநிதி திருப்பணிமாலை.[2]

பொய்கைமுத லாழ்வார்க ளனைவரிற்கோ ளூரன்வில்லி புத்தூர்வேந் தன், வையகமெல் லாம்புகழு மங்கைமன்னன் இவர்களல்லால் மற்றுள் ளோரைச், செய்யமகா மண்டபத்துத் தென்புறத்தி லன்பொடுப்ர திட்டை செய்தான், கைமதவா ரணங்காத்த வடமலைந ராதிபதி காவையானே.[8]

தடக்கருணை பொழிபுகுழு ராண்டிலா ரம்மனெழுந் தருளுங் கோயில், வடக்குமணி மண்டபத்தை வாரம்வைத்து நவமணியால் மலைபோற் செய் தான், அடக்குசினப் புலிபோல வடையலார் தங்கள்திறத் தடுபோர் செய் யுங், கடக்கரட குஞ்சரத்தான் வடமலைக்கோன் நராதிபதி காவையானே.[22]

செங்கமல மலர்வாவித் திருக்கோளூர் வந்தருள்தே வேசன் செங்கை, அங்கிதிருக் கட்டுவடஞ் செழுங்கனகத் தால்முடிப்பித் தணிந்தான் செங் கோல், மங்கையர்கள் மடலேற வாசியேறும் ப்ரவுட மான தீரன், கங்கை குலம் வளர்பெருமான் வடமலைந ராதிபதி காவையானே.[34]

கற்பகா லம்வரைக்கும் புகுழூரர் கொண்டருளக் காதலாகி, யற்பசி மாத் தையிலூஞ்சல் திருநாளு முண்டாக்கி யடர்ந்தநீல, வெற்பனைய கோ ளூரார் பரமபத வாசலில் விழாவுங் கண்டான், மற்புயன்றென் காவைநகர் வடமலைபூ பதிசிலைக்கை மார வேளே.[55]

---

[1] தென்திருப்பேரைக் குழைக்காதர் திருப்பணிமாலை ஆசிரியர்பெயர் தெரியவில்லை. இது சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ் ரீடராகவிருக்கும் திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்களால் 1933-ல் வெளியிடப்பட்டது.

[2] இத்திருப்பணிமாலையும் திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்களால் ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்டுளது.

௳

சேக்கிழார்காலம்.

[வை. சுந்தரேசவாண்டையார், ஆசிரியர், திருவையாறு.]

சைவசமயத்தின் வலக்கண்போல்வதாய்த் தேவாரமுதலிய திருநெறித் தமிழ்மறைகளுக்கு ஒரு விளக்கவுரையனையதாய், அன்புநெறிச்செல்வார்க்கோர் பெருவிளக்காய் விளங்கும் திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணத்தைப் "பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட"வும், செந்தமிழ் நறுமணம் திசைதொறும் கமழவும் அருளிச்செய்தபெரியார் சேக்கிழாராவர்.

அப்பெரியார் தன்கண் தோன்றும் பேறுபெற்ற திருப்பதி, "சான்றோருடைத்"தென ஆன்றோர்புகழ்ந்த தொண்டைநன்னாட்டுப் புலியூர்க்கோட்டத்து அமைந்த குன்றாப்புகழ்மலி குன்றத்தூராகும்.

"உலகத்துக்காணி" எனத் திருவள்ளுவர் புகழ்ந்த தாளாண்மை மிக்க வேளாண்குலத்திற் சேக்கிழார்குடியிற்றோன்றி அருண்மொழித்தேவர் என்னும் பிள்ளைத்திருப்பெயர் பெற்ற இவர் அக்குலத்துக்கு ஒரு திலகமென முதன்மைபெற்றுத் திகழ்ந்ததால் சேக்கிழார் என்ற குலப்பெயராலேயே குறித்தழைக்கப்பெற்றார்.

கல்வி கேள்விகளால் நிறைந்து திருந்திய ஒழுக்கம்வாய்ந்து விளங்கிய சேக்கிழாரைச் சோழமன்னன் தனக்குக் கண்ணனைய சூழ்ச்சித்துணை வருளொருவராகக்கொண்டு 'உத்தமசோழப்பல்லவன்' என்ற சிறப்புப்பட்டமளித்துப் பாராட்டி வாழ்ந்தான். அந்நாளிலே அம்மன்னன் தமிழ்ச்சுவை திளைத்தல் ஒன்றனையே பெரிதும் விரும்பிச் சீவகசிந்தாமணி என்னும் சமணகாவியத்தைப் படித்து இன்புறுவதிலே பெரும்பொழுது போக்குவதைக் கண்ட சேக்கிழார் அவனைத் திருத்தி நன்னெறியிற் செலுத்தத் திருவுள்ளங்கொண்டு "அரசே! சமணர்பொய்ந்நூலாகிய இது மறுமைக்காகாது; இம்மைக்கும் அப்படியே; இம்மை மறுமை

இரண்டினுக்கும் சிவகதை உதவும்" என்றார். 'அத்தகைய சிவ கதை எது?' என அரசன் வினவச் சுந்தரமூர்த்திநாயனார்பாடிய திருத்தொண்டத்தொகையையும் அதை விரித்து நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர்திருவந்தாதியையும் கூறி அவற்றுளடங்கிய நாயன்மார்வரலாறுகளையும் சொல்ல, அரசன் கேட்டுச் செந்தமிழ்வளந் ததும்பக் காவியமாக அவற்றைப் புனைந்து தருமாறு வேண்டினன்.

அவ்வேண்டுகோட்கிணங்கிய சேக்கிழார் தில்லைநகர்சென்று கூத்தப்பிரான் திருமுன்னிலையில் வணங்கி, அருள்வேண்டிநிற்ப எம்பெருமான் திருவருளால் "உலகெலாம்" என்ற திருவாக்கு எழுந்தது. அதையே முதற்சொல்லாகக்கொண்டு திருவருட்டுணை யால் பெரியபுராணத்தைச் சேக்கிழார் பாடிமுடித்தார்.

அதை அறிந்த வளவன் தில்லையடைந்து, புராணத்தை அரங்கேற்றுவித்துச் சேக்கிழாரை யானைமேலேற்றி ஊர்வலஞ் செய்வித்துத் தன் இருகையாலும் அவருக்கு வெண்சாமரை வீசிப் பெருமைப்படுத்திப் பேறுபெற்றான்.

நம்பியாண்டார்நம்பிகள் வகுத்தருளிய பதினொரு திருமுறைக ளுடன் பெரியபுராணம் பன்னிரண்டாந்திருமுறையாகச் சேர்க் கப்பட்டுப் பொலிந்துநிற்கின்றது. நிற்க.

இவ்வாறு பெரியபுராணம் பாடுவித்த சோழன் யார்? என ஆராய்வோம். கல்வெட்டுத்துறையின் 1926—1927—ஆம் ஆட் டையறிக்கையில் (Annual Reports on Epigraphy 1926-27) பெரியபுராணம் பாடுவித்தவன் இரண்டாங்குலோத்துங்கசோழன் என்று கண்டிருக்கிறது. அது பொருந்துவதாகத் தோன்றவில்லை.

ஆசிரியர் சேக்கிழார் தம் நூலில் அநபாயன் என்ற சோழனைப் பலவிடங்களில் புகழ்ந்திருக்கின்றார். அவ்வநபாயன் பேரம்பல முகட்டுக்குப் பொன்வேய்ந்தான் என்பது,

*"மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்றிருப் பேரம்ப லஞ்செய்ய
தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்
ஆய சீர்அன பாயன் அரசவை"

என்ற பாயிரச்செய்யுளால் விளங்குகிறது. எனவே பேரம்பல முகடு பொன்வேய்ந்த சோழனே பெரியபுராணம் பாடுவித்தவன் என்பது உறுதியாகின்றது.

பேரம்பலம் பொன்முகடுவேய்ந்தவன் யார்? என்பதைத் துணிதல் வேண்டும். கல்வெட்டுத்துறையாளர் இரண்டாங்குலோத்துங்கன் பேரம்பலம் பொன்வேய்ந்தான் எனக் கொண்டனர். ஆனால் அவ்விரண்டாங்குலோத்துங்கனது தமிழாசிரியரும் அவனுக்கு முன்னும் பின்னும் நெடுங்காலம் வாழ்ந்தவரும் மூன்றுசோழர்களுக்கு உலாவும், தக்கயாகப்பரணியும் பாடியவருமாகிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் குலோத்துங்கசோழன் உலாவிலே அவனது அரிய செய்கைகள் பலவற்றை எழுபத்தைந்தாங்கண்ணி முதல் நூற்றுப்பதினொருங்கண்ணிமுடிய விவரித்துக் கூறுகையில் அவன் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்ததைக் கூறுகின்றனரேயன்றிப் பேரம்பலத்திற்குப் பொன்வேய்ந்தமையைக் கூறவில்லை. எனவே பேரம்பலம் பொன்வேய்ந்தவனும் பெரியபுராணம் பாடுவித்தவனும் இரண்டாங்குலோத்துங்கனல்லன் என்பது போதரும்.

அஃதன்றியும், தில்லைமன்றிற் கிடந்த திருமாலைக் கடலிற் குலோத்துங்கன் போகட்ட செய்தியை ஒரு சிவத்தொண்டெனக் கருதிப் பாராட்டித்,

"தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து"—

என்று குலோத்துங்கசோழனுலாவினும்,

* திருத்தொண்டர்புராணம் பக்கம்-2. சைவசித்தாந்த மகாசமாஜப் பதிப்பு.

"முன்றிற் கிடந்த கருங்கடல்போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல்பெற்ற
மரகத மேருவை வாழ்த்தினவே'

என்று தக்கயாகப்பரணியிலும் பாடிய கூத்தர், அக்குலோத்துங்கன் செய்வித்திருந்தால் பெரியபுராணம் பாடுவித்த பெருஞ் சிறப்பைப் பாராட்டிச்சொல்லியிருப்பாரன்றோ? அவ்வாறு அவர் சொல்லாமையாலும் அவன் பெரியபுராணம் பாடுவித்தவன் அல்லன் என்பது பெறப்படும்.

மற்றொருசெய்தியும் இதனை வலியுறுத்தும். இரண்டாங் குலோத்துங்கன் ஒட்டக்கூத்தர்பால் பேரன்புடைய மாணவன் என்பது,

'பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் சொல்லுவரே'

என்ற அவன் வாக்கினால் அறியலாம். தன் மதிப்புக்குரியவரும் பெருஞ் சைவப்பற்றுடையவரும் ஆகிய கூத்தரைக்கொண்டு அவன் பெரிபுராணம் செய்வித்திருக்கலாமே? அவ்வாறு செய்யாமையும் அவன் பெரியபுராணம் பாடுவியாமைக்குச் சான்றாகும்.

கல்வெட்டுத்துறையாளர் திருப்புறம்பியம் சிவன்கோயிலில் இடைநாழிகையின் (அர்த்தமண்டபத்தின்) தென்சுவரிலுள்ள "சுவஸ்திஸ்ரீ திருப்பேரம்பலம் பொன்வேய்ந்த திரிபுவனசக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழதேவர்க்குயாண்டு எழாவது' என்று தொடங்கும் கல்வெட்டினை இரண்டாங்குலோத்துங்கனது என்று தவறாகக்கொண்டு சேக்கிழாரை அவன்காலத்தவரென்று துணிந்தனர். அக்கல்வெட்டு அவனுடையதன்று, ஏனெனின் அக்கல்வெட்டினுக்கு மேலே "சுவஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்குயாண்டு ௩௩-வது" என்று தொடங்கும் மற்றொருகல்வெட்டுளது. அது மூன்றாம் இராசராசன்கல்வெட்டென்று கல்வெட்டுத்துறையாளர்கொண்டனர்.

இரண்டாங்குலோத்துங்கனுக்கு மூன்று தலைமுறைக்குப்பிந்தியவன் மூன்றும்இராசராசன். எனவே மூன்று தலைமுறைக்கு முந்தியவன்கல்வெட்டுக் கீழும் பிந்தியவன்கல்வெட்டு மேலும் அமையுமாறு யாங்ஙனம்? முந்தியவனது மேலும் பிந்தியவனது கீழும் அமைவதன்றோ இயலும்? ஆகவே கல்வெட்டுத்துறையாளர் கொண்டகருத்துத் தவறுடையதாகும்; உண்மையாதெனின் மேற்கூறிய கல்வெட்டுக்களிற் கண்ட இராசராசன் இரண்டாம் இராசராசனே. குலோத்துங்கன் மூன்றுங்குலோத்துங்கனே.

இவ்வாறுகொள்ளின் யாம் மேலேஎழுப்பிய ஐயத்திற்கு இடமிராது.

மேலும் மூன்றுங்குலோத்துங்கன் மிகுந்த சைவப்பற்றுடையவன் என்று தெரிகிறது. அவனைச் சிவபெருமானின் ஏக பக்தன் என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது. அவனே பேரம்பலம் பொன்வேய்ந்தவனும் பெரியபுராணம் பாடுவித்தவனுமாவான் என்பது மேலேகூறிய காரணங்களால் உறுதிப்படுகிறது.

எனவே சேக்கிழார்வாழ்ந்தது மூன்றுங்குலோத்துங்கன்காலத்திலேயாம் என்பது வலியுறும்.

[இவ்வாராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய மேற்குறித்த இரண்டு கல்வெட்டுக்களின் சிலதொடர்களை ஈண்டுத் தருகின்றேன். இவைகள் இதுகாறும் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளிவராதவைகள்.]

I

இடம் — இடைநாழிகையின் (அர்த்தமண்டபத்தின்) தென்புறம்

1 சுவஸ்திஸ்ரீ திரிபுவனசக்

2 ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவற்

3 கு யாண்டு ௧௩-வது விக்கிர

4 ம சோழவளநாட்டு அண்டாட்டுக்

5 கூற்றத்துடையார்க்கு

6 திருப்புறம்பியமுடை

7 யார் தேவதானமாக திருப்
8 புறம்பியத்துக் குடிமகன்
9 ஆலங்குடையான் அடிகள் புறம்
10 பியன் உடையாற்கு குடுத்த
11 நொந்தாவிளக்கு......... (என்று தொடர்கிறது.)

II

இடம் — இடைநாழிகையின் தென்புறம். (மேற் கல்வெட்டுக்கு அடுத்த கீழ்பாலுள்ளது.)

1 சுவஸ்திஸ்ரீ திருப்பேரம்பலம் பொன்வேய்ந்த தி
2 ரிபுவனசக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழதேவற்
3 கு யாண்டு எ-வது வடகரை விக்கிரமசோழவளநாட்டு அண்டாட்டுக்கூற்றத்து திருப்
4 புறம்பியத்து இருக்கும் ஆலங்குடையான் அடிகள் புறம்பியநும் அயிற்
5 காடுடையான் குற்றி திருச்சிற்றம்பலமுடையானும் இவ் விருவோம் உடையார்க்கு திங்கள் அமா
6 வாசைக்கு அமுதுசெய்தருள அமாவாசை ஒன்றிற்கு ஆளுடைநாச்சிக்கும் திருப்பள்ளியறை நா
7 ச்சியார்க்கும் செந்நெல் திருஅமுது அரிசி
8 நாநாழியும் கூத்தாடுந்தேவர்க்கும் பிராட்டியார்க்கும் ஆக திருஅமுது அரிசி நாலுநாழியும்
9 பிள்ளையார் முத்துமுளைக்கன்றுக்கு திருஅமுது அரிசி நாநாழியும் பிள்ளையார் அறம்பயந்த பிள்ளை
10 யார்க்கும் திருஅமுது அரிசி நாநாழியும் ஆக அரிசி....... (என்று தொடர்கிறது.)

௨

நம் முன்னோர்கள் இயற்றிய
ராஜநீதி நூல்கள்*

(ஓர் ஆராய்ச்சி)

(கோவை. திரு. சி. த. நாராயணசாமி முதலியார்.)

ஒலிக்கின்ற கடலை எல்லையாகவுடைய பூமியை ஒருகுடைக் கீழிருந்து அரசுசெய்யும் மன்னர்மன்னர்கள், தாம் கற்றதோடமையாது அதன்படி யொழுகவேண்டிய தர்மத்தையும் கைக்கொள்ளவேண்டும். அவர்களுக்கெனவே நம்முன்னோர்கள் வகுத்த நீதிநூல்கள் அளவிறந்தன. அவைகள் வடமொழிகளிலேயே மிகுதியாகவுள்ளன. அந்நூல்களை மன்னர்களேயன்றிப் பண்டிதர்களும் நீதிநூல்களின் சுவை எவ்வாறுளதென்று அறிவதில் அவா மிக்குடைய வித்தியார்த்திகளும் கற்றுணரவேண்டியது அவசியம். ஆயின், அதன்படி அவர்கள் இப்போது கற்பதில்லை. முன்னர் மிகுதியாகக்கற்றுச் சிறப்புற்றிருந்தனர். தற்போது பொருளாதார விசாரத்தில் ஆழ்ந்த கருத்துடைய விற்பன்னர் பலர் அத்துறையில் தங்கள் கவனங்களைச் செலுத்தி அதுசம்பந்தமான நூல்களை ஆராய்ந்துவருகின்றனர். அதனுடன் நீதிநூல்களையும், அவற்றில் பொதிந்துள்ள அறத்துறைகளையும் நுணுகி ஆராய்வார்களாயின், அவர்கள் அடையும் ஆநந்தம் அளவிலடங்காதனவாகும். நாம் இங்கு எழுதத்தொடங்கும் கட்டுரையில் நம் முன்னோர்கள் நன்றாக இயற்றிய நீதிநூல்களின் பெயர்களையும், அவற்றின் அருமை பெருமைகளையும், பயன்களையுமே விளக்க நினைந்துள்ளோம். அதனோடு "காமந்தக நீதிசாரம்," சோமதேவசூரியின் "நீதிவாக்கியாமிர்தம்," வைசம்பாயனரியற்றிய "நீதிப்பிரகாசிகை," "சுக்கிரநீதிசாரம்," பாரதம் சாந்திபர்வத்திலுள்ள நீதிப்பிரசங்கங்கள், "கௌடில்யன் அர்த்தசாஸ்திரம்" ஆகிய நூல்களையும் தனித்தனியாக ஆராய்ந்து, அந்நூலாசிரியர்களுடைய கருத்துக்களையும், அவர்கள்

* இது, தெலுங்கு பாரதிப்பத்திரிகையில் வித்துவான் வேங்கடாங்கையா. M. A. அவர்கள் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

பிறநூல்களைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் விவரித்து அத்தகைய அபிப்பிராயபேதங்களுக்கு ஏதுக்கள் யாவையென்பதையும் ஆராயவும் கருதியுள்ளோம். இத்தகைய ஆராய்ச்சிகட்குப் போதிய சாதனங்கள் நம்மிடத்தில்லாதிருப்பினும், சுருங்கிய சாதனங்களை வைத்துக்கொண்டு அவைகளை ஏற்றவகையில் உபயோகித்துக் கட்டுரையைப் பூர்த்திசெய்வதைக் கடமையாகக் கொண்டுள்ளோம்.

மேற்குறித்த விஷயங்களை ஆராயத்தொடங்குமுன்னர்க் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. அவை:—வடமொழியிலுள்ள அரசநெறிநூல்களை ஆராய்வதால் எய்தும் பயனென்ன? தற்காலத்திற்கும், முற்காலத்திற்கும் (அதாவது வடமொழி நீதிநூலாசிரியர்காலத்திற்கும்) மிகவும் வேறுபாடிருக்கின்றதா? அப்போதிருந்த விருப்பத்திற்கும் உறுதிக்கும், இப்போதிருக்கும் இச்சைக்கும் நிர்ணயத்திற்கும் சம்பந்தம் இருக்கின்றதா? அரசியல்விவகாரங்களில் நாம் முதன்மையாகக் கவனிக்கின்ற பிரஜைகள், அரசர்களின் அதிகாரத்திற்கு அடங்கும் விஷயங்களில் அக்காலக் குடிகளின் எண்ணம் யாது? இத்தகைய சந்தர்ப்பத்தில் பழையநூல்களின் ஆராய்ச்சி இக்காலத்தில் நாம் அநுபவிக்கின்ற கஷ்டங்களுக்கு உதவியாகுமா? என்பவைகளே. இவைகட்கு ஏற்ற சமாதானங்கள் சொல்லவேண்டுவது நமது கடமையாயிருக்கிறது.

முற்காலத்திற்கும், தற்காலத்திற்கும் நிலைமையில் வேறுபாடுகள் விசேடமாக இருப்பினும், நம்முன்னோர்கள் இயற்றிய நீதிநூல்களிலுள்ள சித்தாந்தங்களில் சில எப்பொழுதும் மக்கள் பின்பற்றுவதற்கு உரியனவே. அவை, மானிட இயற்கையில் விஸ்தாரமான வேற்றுமைகள் இல்லாமல் இருப்பனவே. நீதிசாஸ்திரங்களிலிருந்து தர்க்கிப்பதற்குரியவான விஷயங்கள் பல இருப்பினும்; அவைகளில் முக்கியமானவை: ராஜ்யாதிகாரம் எத்தகையது? அதிகாரத்திலுள்ள பிரிவின் ஒழுக்கம் எத்தன்மையது? அதிகாரிகளினால் குடிகளுக்குத் துன்பம் தீங்காதிகள் உண்டாகாமலிருப்பதற்குச் செய்யவேண்டியதென்ன? என்பவைகளே. அரசன் அதிகாரத்திற்கும் மனிதசுபாவத்திற்கும் உள்ள பரஸ்பர சம்பந்தங்

களை விவரிப்பதில் அரசியல்நூல்களின் முக்கியநோக்கம், மேற் கூறியவைகளைத் தெளிவுபடுத்துவதேயாம். நம் முன்னோர்களது உபாயம், இப்பொழுதுமட்டுமல்லாமல் முற்காலத்திலுங்கூட நன்ருகத் துலக்கமடைந்திருந்தன.

நீதிநூல்களின் ஆராய்ச்சி தேசசரித்திரப்படிப்பினுல் மிகுதியும் முன்னேற்றம் அடைவதற்குரியது. தேசசரித்திரக்கல்வி மக்களுக்கு அத்தியாவசியமானதென்று நம்மில் பலர் நன்கறிந்திருக்கின்றனர். காலாநுஸாரமாக, தேசங்களிலுண்டாகின்ற மாறுபாடுகளைப் போதிய திருஷ்டாந்தங்களுடன் அறிவதே தேசசரித்திரப்படிப்பினுல் வரும் பயன். இம்மாறுபாட்டில், நமது ஆசாரங்கள் முதலிய வெளிவிஷயங்களையன்றி, அவற்றுள் அந்தரங்கமான அபிப்பிராயங்களுங்கூட அடங்கியிருக்கின்றன. மற்றும் இவ்விருவிதமான மாறுபாடுகளுக்கும் காரியகாரணரூபமான சம்பந்தமும் இருக்கிறது. அது அபிப்பிராயம் மாறுபடுவதனுல் ஆசாரம் மாறுபடுவதும் ஆசாரம் மாறுபடுவதனுல் அபிப்பிராயம் மாறுபடுவதுமேயாம். அரசியல்விஷயத்தில் நம் முன்னோர்களது உட்கருத்துக்களைத் தெரிந்துகொள்வதற்கு ராஜநீதிநூல்களே முக்கியமானவை.

ஸம்ஸ்கிருதத்திலுள்ள காவியங்கள், நாடகங்கள், முதலியவற்றிற்கு வியாக்கியானங்கள் எழுதிய மொழிவல்லார்கள், ராஜநீதிநூல்களின் உதவியைக்கொண்டே எழுதினரெனலாம். "இரகுவமிசம்" "மாகம்" "முத்திராராக்ஷஸம்" "மல்லிநாத சூரியின் வியாக்கியானங்கள்" முதலியன இவற்றிற்குச் சான்ரும். உத்தம அரசியல் எது? திக்குவிஜயத்திற்குத் தகுந்த காலம் எது? என்ற கேள்விகளுக்கு உரிய விடைகள், காவியங்களில் இருக்கின்றன. காவியங்களுக்கும், ஸ்மிருதிகளுக்கும் உரைவகுத்தவர்கள் அவர்களுடைய எண்ணங்களைப் பிறர் அறியும்படி நீதிநூல்களிலுள்ள வசனங்களைச் சாதாரணமாக எடுத்தாண்டுள்ளனர். இக்காரணத்தைக் கொண்டுகூட ராஜநீதிநூல்களின் ஆராய்ச்சி மிகவும் உபயோகமானதென்று கூறலாம்.

நம் முன்னோர்கள் இயற்றியருளிய நீதிநூல்கள் அனைத்தினும் "கௌடில்யரது அர்த்தசாஸ்திரமே" உயர்வுடையதும் மிகவும் பழமையானதுமாம். அந்நூலில் அரசபரிபாலனத்திற்குரிய விஷயங்கள் நன்றாக வருணிக்கப்பட்டுள்ளன. பின் வந்த நூல்களெல்லாம் கௌடில்யரது நூலைப் பின்பற்றியே எழுதப்பட்டுள்ளன. வடமொழி அரசநீதிநூலாராய்ச்சியுடன் நீதிநூல்களையும் சேர்த்து ஆராய்வது ஒழுங்கானதெனினும், இருகாரணங்களைக் கொண்டு நீதிநூல்களை நாம் முன்னர் ஆராய எண்ணியுள்ளோம். இரு காரணங்களுள் முதற்காரணம்—கௌடில்யரது அர்த்தசாஸ்திரம் ஆராய்ச்சியோடிருப்பதென்பது; இரண்டாவது காரணம்—மற்ற நூல்கள் ஆராய்ச்சிசெய்யப்பட்டபின்னரே கௌடில்யரின் பெருமை நன்றாக விளக்கப்பெறுமென்பது. ஆதலால் முதலில் காமந்தகநீதிசாரத்தை ஆராயத்தொடங்குகிறோம்.

காமந்தகர் எக்காலத்தில் வாழ்ந்திருந்தனரென்று திட்டமாகக் கூற நம்மால் இயலவில்லை. கி. பி. 300-ஆம் ஆண்டில் இருந்தனரென்று சிலரும், 700-ஆம் ஆண்டில் இருந்தனரென்று வேறுசிலரும் கூறுகின்றனர். இவற்றில் எது உண்மையென்று கூறுதற்கு எம்மாற் கூடவில்லை. ஆனல் இதுபற்றி இருவித அபிப்பிராயங்களிருக்கின்றன. அவற்றுள் ஒன்று.—

பண்டைக்காலத்தில் கிழக்குச் சமுத்திரத்தீவில் நமது நாகரிகம் மிகுதியாக வியாபித்திருந்தது. அத்தீவில் "பலித்தீவு" என்பதும் ஒன்று. அத்தீவில் "காமந்தக நீதிசாரம்" என்ற பெயருடன் ஒரு நூல் வழங்கப்பெற்றிருந்ததாக அறியப்படுகிறது. நான்காவது நூற்றாண்டிலிருந்தே 'பலித்தீவில்' பௌத்தமதம் பரவிப் பிரசித்திபெற்றிருந்தது. காமந்தகநீதிசாரம் 'ஹைந்தவநூல்'. இந்நூல் நான்காம்நூற்றாண்டிற்கு முன்னரேயே பலித்தீவுசென்று பரவியிருக்கவேண்டும். இக்காரணங்கொண்டு இந்நூல் கி. பி. 300-ஆம் ஆண்டில் இயற்றப்பெற்றதென்று கூறக்கூடியதாயிருக்கிறது. ஆனல், சிலர் இதனை மறுக்கின்றனர். பலித்தீவில் காமந்தக்நீதிசாரம் பரவியதுபற்றியும், அது ஆராய்ச்சிசெய்யப்பட்டிருப்பதுகுறித்தும் நாம் யாதுங் கூற முந்தவில்லை. ஆயின், அவை

பற்றி இன்னும் யாரும் ஆராய்ச்சிசெய்ய முயலவில்லையென்பது மட்டும் உறுதியான விஷயம். இல்லை; அவை ஆராயப்பட்டு அதன் காலம் மூன்றாவது நூற்றாண்டென்று முடிவுசெய்யப்பெற்றுளது என்று கூறப்படுமாயின், அது மறுக்கத்தக்கதேயாம். அந்நூல் நான்காவதுநூற்றாண்டிற்குமுன்னர் அத்தீவுக்குச் சென்றதென்பதற்குப் போதிய ஆதாரமில்லை. பௌத்தமதம் பரவியபின்னரே அந்நூல் அத்தீவில் பரவிற்று. நமது தேசத்திற்கும், அத்தீவிற்கும் சம்பந்தம் ஏற்பட்டது நான்காம்நூற்றாண்டுக்குப் பின்னரேயாம். மதத்திற்கும், நீதிசாத்திர சித்தாந்தத்திற்கும் யாது சம்பந்தம்? நூலாசிரியன் இந்துவாயினும், பௌத்தனாயினும், ஜைனனாயினும் அவனது ராஜநீதிநூலில் மதத்தைத்தழுவிய பேதம் எதுவுமிருக்க நியாயமில்லை. ஹைந்தவமதத்தின் ஆதிக்கம் ஏற்பட்டபோதுதான் காமந்தகநூல் பலித்தீவு சென்றிருக்க வேண்டுமெனக் கூறுவது யுக்தியின் உபாயம் என்பது.

மற்றொன்று:—'காமந்தக நீதிசாரம்' கி. பி. ஆறுநூறும் ஆண்டின் இறுதியில் எழுதப்பட்டதேயன்றி கி. பி. 300-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதல்ல. இவ்வுண்மை வடமொழியில் புலமை சிறந்த 'தண்டி' என்னும் பெயரிய கவிவலரால் எழுதப்பட்ட "தசகுமார சரித்திரத்தின்" முதல் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தண்டியார் ஆறாவது நூற்றாண்டினர்: அந்நூற்றாண்டிலேயே 'காமந்தகநீதிசாரம்' எங்கும் பிரசித்தமாகப் பரவியிருக்கவேண்டுமென ஊகிக்க இடமிருக்கிறது. சிலர், தசகுமாரசரித்திரத்தில் இப்பகுதி தண்டியாசிரியரால் இயற்றப்பட்டதல்லவென்றும், பிரக்ஷிப்தம் என்றும் வாதிக்கின்றனர். (பிரக்ஷிப்தம்-இடைச்செருகல்) இது உண்மையானால், காமந்தகநீதிசாரம் ஆறும்நூற்றாண்டி லியற்றப்பட்டதென்று கூறுவதற்கில்லை. வேறுசிலர் எட்டாம்நூற்றாண்டிலிருந்தே காமந்தகம் மிக விளக்கம்பெற்றிருந்ததாகக் கூறுகின்றனர். பின்னர் எழுதப்பட்ட 'இதோபதேசம்' முதலானவைகளும் அவற்றின் சுலோகங்களும் அவ்வாறே பிரசித்திபெற்றனவெனலாம். ஆகவே, காமந்தக நீதிசாரம் எட்டாம்நூற்றாண்டில் இயற்றப்பட்டதென்றே சொல்லவேண்டும். அதாவது, இற்றைக்கு 1100 ஆண்டுகளுக்குமுன்னரென்று.

இதுபற்றிக் காலநிர்ணயம் செய்வதற்கு நூலின்கண் ஆதாரங்களில்லை. நமது பண்டைய நூல்கள் அனைத்தினும் இது ஒரு பெரிய குறையாகவே இருந்துவருகிறது. தம்மைத்தாமே புகழ்ந்து கொள்வதில் நம் முன்னோர்கள் விருப்பற்றவர்களாகவே யிருந்திருக்கின்றனர். அம்மட்டோ! அவர்கள் தாங்கள் இயற்றிய அரும்பெருநூல்களில் தமது வாழ்க்கை, ஜீவியகாலம், அக்கால சம்பவங்கள், தமதுகல்வியின் உயர்வு, விசேடநிகழ்ச்சிகள் முதலியவற்றைக் குறித்துவைத்தார்களில்லை. காமந்தகர்கூட அத்தரத்தினரேயாவர். காமந்தக நீதிசாரத்திற்கு அகலவுரையெழுதிய ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளும் காமந்தகரைப்பற்றி எதுவும் கூறினரில்லை. காமந்தகர் தமது சித்தாந்தங்களின் உண்மையை வெளிப்படுத்துவதன்பொருட்டே சில அரசர்களுடைய பெயர்களையும் குலத்தினுடைய பெயர்களையும் தம் நூலிற் குறிப்பிட்டனர். இவை, தமது சமகாலத்தவர்களையும் அதற்குச் சற்று முந்தியவர்களையும் குறிக்கும் பெயர்களாக இருந்திருக்குமாகில் காமந்தகரின்காலத்தை நிர்ணயித்தறிவதற்கு நமக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். காமந்தகர் அவ்வழியிற் செல்லாமல், பண்டை நூலாசிரியர்கள் எந்த உதாரணங்களைக் காட்டினர்களோ! அவைகளையே தாமும் காட்டியுள்ளனர். 'வைஜவன், நகுஷன், தாண்டக்யன், ஜனமேஜயன், ஜலன், வாதாபி, பௌலஸ்தியன், தம்போத்பவன், பரசுராமன், அம்பரீஷன், நாபாகன், நளன்' ஆகியோர் பெயர்களே காமந்தக நீதிசாரத்தில் காட்டப்பெற்றவை. இவர்கள் புராணங்களில் பிரசித்திபெற்றவர்களேயன்றிச் சரித்திரப்பிரசித்தியுடையவர்களல்லர்; ஆதலால், காமந்தகர்காலத்தை வரையறுத்துக் கூறக்கூடவில்லை.

நூலாராய்ச்சிக்கு ஆசிரியர் காலநிர்ணயம் அவசியமா? நூலினது குணகுணங்களைப்பற்றிய விஷயமே நமக்கு முக்கியமானதென்று சிலர் கூறக்கூடும். காலநிர்ணயத்தினால் இரண்டு நன்மைகள் உண்டாகின்றன. 'நீதிசாத்திரங்களைப்பற்றிய நூல்கள் வடமொழியில் மிகுதியாக வுள்ளதால், அவைகளில் எது முன்னர் எழுதப்பட்டது? எது பின்னர் எழுதப்பட்டது? என்பதைத்

தெரிந்தாலன்றி, நூலாசிரியர்களின் அபிப்பிராயங்கள் எந்தக்கிரமத்தை அநுசரித்து மாறுகின்றன? நூலின் தன்மை அப்பொழுது எவ்விதம் விருத்தியடைந்துளது?, அல்லது நசித்துளது என்பவற்றை வரையறுக்க இயலாது. மற்றொன்று, நூலாசிரியர்கள் சுதந்தரமுடையவர்களா? சுதந்தரமில்லாதவர்களா? என்பவற்றைப் பகுத்தறிவதற்குத் துணையாயிருப்பது. இவ்விரண்டும் இல்லாத நூல்கள் ஆராய்ச்சிக்குத் தகுதியற்றவையென்று தாராளமாகக் கூறலாம்.

காமந்தகர் நீதிசாரத்தை எழுதுவதற்கு உரிய தமது நோக்கத்தை அடியில் வருமாறு அறிவித்திருக்கின்றனர். அது,

"உலகமக்கள் பரிபாலனத்தைப்பற்றி ராஜவித்தையில் ஒப்புமையற்றவர்களின் உடன்பாட்டையும், கௌடில்யரது சித்தாந்தத்தையும் அநுசரித்து இது தெளிவாக எழுதத்தொடங்கியது" என்பது.

காமந்தகர், கௌடில்யரது கிரந்தத்தைப் பின்பற்றிச் செல்வதும், பின்பற்றாது சுயேச்சையை மேற்கொண்டு போவதும் இனிவரும் மேல்தான் அறியவேண்டியதாயிருக்கிறது. கௌடில்யரது நூலில் சூத்திரபாகங்களேயன்றி ஆறாயிரம் சுலோகங்களும் இருக்கின்றன. காமந்தகரது நூலும் சுலோகரூபமானதே. அதன் சுலோகங்களின் எண்ணிக்கை ஆயிரத்து இருநூற்றைம்பது (1250)

இனி, கௌடில்யரது கிரந்தத்தைத் தழுவியும், விலக்கியும், வேறுபடவுரைத்தும், முன்மாதிரியாகக்கொண்டும் தமது மதத்தை நிலைநாட்டுவதில் காமந்தகர் கைக்கொண்டமுறை எத்தகையதென்பதைக் கவனிப்போம்.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஒரு குறிப்பு.

மாறனலங்கார நூலாசிரியரான திருக்குருகைப்பெருமாள்கவிராயரால் இயற்றப்பெற்ற பாரகாவியமான குருகைமான்மியம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் உள்ளதோரேட்டுச்சுவடியையும் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் அன்புடனுதவிய எட்டுச்சுவடியொன்றையும் கொண்டு பரிசோதித்துச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிடப் பெற்றுவந்திருக்கிறது.

இது, கடவுள்வாழ்த்தும் பதிகமும் நாடுவாழ்த்துச்சருக்க முதல் மவுனநீங்குசருக்கம் இறுதியாக 28 சருக்கங்களும் உடையதாக இயற்றப்பட்டதென்று (ஐயரவர்கள் ஏட்டின் முகப்பிற் சேர்க்கப்பட்டுள்ள) அட்டவணையால் தெரிந்தது.

இவற்றுள் சங்கத்தேட்டுப்பிரதி 19-வது மாடத்திருக்குருகூர்ச் சருக்கத்து 118-ஆம் செய்யுள்வரையுமேயுள்ளது. ஐயரவர்கள்பிரதி 26-வது வரம்பெறுசருக்கத்து 83-ஆம் செய்யுளின் முற்பாதிவரையுமேயுள்ளது. (எஞ்சியவை சிதைந்திறந்தொழிந்தனபோலும்.)

இதனைச் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளியிட்டுவந்ததில் வரம்பெறுசருக்கத்தின் 83-ஆம் செய்யுளின் முதற்பாதிவரை வெளியிடலாயிற்று. எஞ்சிய பாகமுமுள்ள ஏட்டுப்பிரதிகள் கிடைக்காமையால் அடுத்த பகுதிமுதல் இதுவரை வெளியிடப்பெற்ற செய்யுட்களுக்குக் குறிப்புரையும் விஷயசூசிகையும் முகவுரை முதலியனவும் எழுதி வெளியிடவேண்டியதாயிருக்கிறது. இந்நூலின் எஞ்சிய பகுதியுமுள்ள ஏட்டுப்பிரதியுடையார் கொடுத்துதவுவார்களாயின் நூலை முற்றுவித்துப் பின் குறிப்புரை முதலியவற்றை வெளியிட உதவியாயிருக்கும்.

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.